மாலெ தீப்பொறி
MALAE THEEPORI
CPIML LIBERATION
2023 ஜுன் 1-15 தொகுதி 21 இதழ் 20 விலை ரூ.10 ஆண்டு சந்தா ரூ.200

# இகக(மாலெ) பொதுச் செயலாளர் தோழர் திபங்கர் அவர்களுக்கு விசிகவின் அம்பேத்கர் சுடர் விருது





# AMBEDKAR SUDAR: COM. DIPANKAR BHATTACHARYA

Born in Guwahati, Assam in December 1960, Com.Dipankar Bhattacharya serves as the General Secretary of the Communist Party of India (Marxist-Leninist). This award is a testament to Com. Dipankar's unwavering commitment and exceptional contributions as a leading communist leader in India. Throughout his illustrious career, spanning nearly five decades, Com. Dipankar has exemplified the true spirit of communism, dedicating his life to the pursuit of social and economic justice for the people of India.

Com. Dipankar's leadership and astute guidance as the General Secretary of the Communist Party of India (Marxist-Leninist) have been instrumental in shaping the party's ideology and direction, inspiring countless individuals to embrace the principles of communism and work towards a more equitable society.

In addition to his leadership role, Com. Dipankar is a prolific writer and commentator on contemporary politics. His extensive body of work delves into various facets of Indian society, with a particular focus on the working class, India's freedom struggle, Bhagat Singh's heroic legacy, and Ambedkar's invaluable contributions. Through his writings, he provides invaluable insights and fosters a deeper understanding of the struggles faced by the oppressed and marginalized communities.

Com. Dipankar's unwavering advocacy for the rights of the oppressed is remarkable. He fearlessly raises his voice against injustices and tirelessly fights for the rights of marginalized sections of society, making a profound impact on the lives of countless individuals.

Furthermore, Com. Dipankar has been a vocal critic of the BJP-led Union government consistently challenging their policies and advocating for a more inclusive and egalitarian society. His unwavering commitment to social justice and tireless pursuit of a fairer India have earned him widespread respect and admiration.

In recognition of his exceptional leadership, prolific contributions to communist ideology, relentless pursuit of social and economic justice, outstanding achievements and acknowledges him as a true champion of the people, the Viduthalai Ciruthaigal Katchi (VCK) is honored to bestow upon **Com. Dipankar Bhattacharya** the **'Ambedkar Sudar'** Award-2023.

*With Regards ...*

**Dr Thol.Thirumavalavan**
Founder - President, VCK

- **28-05-2023**
- **YMCA Play Ground, Nandanam, Chennai.**

2023 ஜூன் 1-15

மாலெ தீப்பொறி

இருவார இதழ்

தொகுதி 21 இதழ் 20

## உள்ளே

தோழர் திபங்கர்க்கு அம்பேத்கர் சுடர் விருது 4
புதிய நாடாளுமன்றக் கட்டடத்தில் செங்கோல் 9
பாஜகவின் தென்னிந்திய நுழைவாயில் மூடப்பட்டது 12
எப்போ என் கனவு நனவாகும் 18
தமிழகத்திற்கு தனித்துவமான கல்விக் கொள்கை 20

**ஆசிரியர்**

**ஜி.ரமேஷ்**

**ஆசிரியர்குழு**

**பாலசுந்தரம்**
**பழ.ஆசைத்தம்பி**
**அ.சந்திரமோகன்**
**கே.ஜி.தேசிகன்**

**மேலாளர்**

**சொ.இரணியப்பன்**

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் – லெனினிஸ்ட்) தமிழ்நாடு மாநிலக்கமிட்டியின் அரசியல் ஏடு**

1/10, 11ஆவது தெரு,
கருணாநிதி நகர்,
அயனாவரம்,
சென்னை – 600023

**நிர்வாக அலுவலகம்**

3/254பி, ஜீவா தெரு,
வண்டலூர்
சென்னை – 600048

தொலைபேசி: 9443507067
9840340741

malaetheepori@gmail.com
www.tamilnadu.cpiml.net
cpimlthamilnadu.blogspot.com

**தலையங்கம்**

# நீரோ மன்னனின் பிடிலும் நவீன நீரோ மன்னரின் செங்கோலும்

*'தமிழுக்கும் தமிழின் தொன்மைக்கும் உரிய அங்கீகாரத்தை பிரதமர் மோடி வழங்கிவிட்டார். இதுவே தமிழர்களுக்குப் போதுமானது. இனியாவது நிதிப் பங்கீடு, கல்வி உரிமை என எதற்கும் உதவாத விசயங்களுக்காகப் போராடுவதை தமிழர்கள் நிறுத்திக் கொள்ள வேண்டும்'. டெல்லி சென்று மோடியிடம் செங்கோலைக் கொடுத்துவிட்டு வந்த பின்னர் மதுரை ஆதினம் பேசியது இது. மோடி-அமித்ஷா எதிர்பார்த்தது இதைத்தான். இந்த மட அதிபதிகளுக்கு நிதிப் பங்கீடு, கல்வி உரிமையெல்லாம் எதற்கும் உதவாத ஒன்றாம். ஊரை அடித்து உலையில் போட்டு என்பார்களே, அப்படி உட்கார்ந்து தின்னும் இவர்களுக்கு மக்கள் படும்பாடு எப்படி கண்ணுக்குத் தெரியும். உலகின் மிகத் தொன்மையான மொழி தமிழ் என்று பேசிய மோடி திறந்து வைத்த நாடாளுமன்றக் கட்டடத்தில் தமிழ் மொழி இல்லை. இந்தி, ஆங்கிலம், சமஸ்கிருதத்தில் மட்டுமே கல்வெட்டுகள். இதுவும் இந்து மட அதிபதிகளின் கண்ணுக்குத் தெரியாது. இந்தியாவின் விடுதலைக்காக அல்ல, தன் விடுதலைக்காக ஆறு, ஏழு மன்னிப்புக் கடிதம் ஆங்கிலேயருக்கு எழுதிய வீர்! சாவர்கர் பிறந்த நாளில் நாடாளுமன்றக் கட்டடத்தைத் திறந்து வைக்கச் சென்றவர்கள் கண்ணில், இந்தியாவிற்காக சிரமப்பட்டு விளை யாடி, பதக்கங்கள் பெற்றுத் தந்த மல்யுத்த வீராங்கனைகள் நடத்தும் போராட்டம் தென்படவில்லை. மல்யுத்த வீராங்கனை களிடம் பாலியல் துன்புறுத்தலில் ஈடுபட்ட பாஜகவின் நாடாளுமன்ற உறுப்பினரும் இந்திய மல்யுத்தக் கழகத்தின் தலைவருமான பிரிஜ்பூஷன் சிங்கை கைது செய்ய வேண்டும் என்று வலியுறுத்தியும் அந்தக் குற்றவாளியை நாடாளுமன்ற கட்டடத் திறப்பு விழாவிற்கு அனுமதிக்கக் கூடாது என்றும் கோரி அமைதியான முறையில் நாடாளுமன்றம் நோக்கிப் போவோம் என்று சொன்னவர்களை கொஞ்சம்கூட கூருணர்வு இல்லாமல் பெண்கள் என்றும் கூட பார்க்காமல் கொடுந்தாக்குதல் நடத்தி கைது செய்துள்ளது மோடி அரசு. குடியரசுத் தலைவரை அழைக்காமல், மல்யுத்த வீராங்கனைகளுக்கு பாலியல் குற்றமிழைத்தவரைக் கைது செய்யாமல், 'சென்ட்ரல் விஸ்டா' என்ற பெயரில் 13,000 கோடி ரூபாய் மக்கள் வரிப் பணத்தில் வெட்டியாகக் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடத்தை திறந்த நாள் இந்தியாவின் கருப்பு நாள் என்று எதிர்க் கட்சிகள் அறிவித்ததில் என்ன தவறு இருக்கிறது?. புதிய கட்டடத்தைத் திறந்த கையோடு பழைய நாடாளுமன்றக் கட்டடத்தை தன் நண்பர் அதானியின் அறக்கட்டளையிடம் கொடுத்து அருங்காட்சியமாக மாற்றப் போவதாக அறிவித்துள்ள நவீன நீரோ மன்னர் நடத்திய திறப்பு விழாவில் எதிர்க்கட்சிகள் கலந்து கொள்ளாததில் என்ன தவறு இருக்கிறது?. நாடே பற்றி எரிந்து கொண்டிருக்கும்போது, பிடில் வாசித்த நீரோ மன்னன் போல், விலைவாசி உயர்வு, வேலையின்மை, பசி, பட்டினி, பாலியல் வன்கொடுமை என பற்றி எரியும் மக்கள் பிரச்சினைகள் எதையும் பற்றிக் கவலைப்படாமல் செங்கோல் பிடித்து மன்னராட்சி மனப்பான்மையில் செயல்படுபவர்களை என்னவென்று சொல்வது? மல்யுத்த வீராங்கனைப் பெண்களை மதிக்காத சங்-பாஜக சனாதனக் கும்பல்களுக்கு ஜனாதிபதி திரௌபதி முர்மு பழங்குடியினத்தவர் என்பது மட்டுமல்ல, அவர் கணவரை இழந்தவர் என்பதாலும்தான் திறப்பு விழாவிற்கு அழைக்கப்பட வில்லை என்று சங்கிகளின் குணமறிந்தவர்கள் கூறுகிறார்கள். இப்படிப்பட்டவர்கள்தான் இந்திய நாட்டை இன்னும் 100 ஆண்டுகள் ஆள அச்சாரம் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வரும் 2024 நாடாளுமன்றத் தேர்தலில் நாட்டு மக்கள் நல்ல பாடம் புகட்டுவார்கள். ❑*

# இகசமாலெ பொதுச் செயலாளர் தோழர் திபங்கர்க்கு அம்பேத்கர் சுடர் விருது - விசிக வழங்கியது





இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்) விடுதலை கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் திபங்கர்க்கு விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பாக 2023ஆம் ஆண்டிற்கான அம்பேத்கர் சுடர் விருது வழங்கப்பட்டது.

ஒவ்வொரு ஆண்டும் விடுதலை சிறுத்தைகள் கட்சி மக்கள் தலைவர்களுக்கு, ஆளுமைகளுக்கு அம்பேத்கர், பெரியார், மார்க்ஸ், அயோத்திதாசர், காமராஜர், காயிதேமில்லத், செம்மொழி ஆகிய பெயர்களில் விருதுகள் வழங்கி வருகிறது. இந்த ஆண்டு அம்பேத்கர் சுடர் விருது இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்) பொதுச் செயலாளர் தோழர் திபங்கர்க்கும், பெரியார் ஒளி விருது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் து.ராஜாவுக்கும் மார்க்ஸ் மாமணி விருது இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) தமிழ்நாடு மாநிலச் செயலாளர் தோழர் கே.பாலகிருஷ்ணனுக்கும் காமராஜர் கதிர் விருது தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் அப்பாவுக்கும் அயோத்திதாசர் ஆதவன் விருது டெல்லி முன்னாள் அமைச்சர் ராஜேந்திரபால் கவுதமுக்கும் காயிதே மில்லத் பிறை விருது பெங்களூர் சட்டப் பல்கலைக் கழக முன்னாள் துணை வேந்தர் மோகன் கோபாலுக்கும் செம்மொழி ஞாயிறு விருது தமிழறிஞர் தாயம்மாள் அறவாணனுக்கும் வழங்கப்பட்டன.

விருதுகள் வழங்கும் நிகழ்ச்சி சென்னை நந்தனத்தில் உள்ள ஒய்.எம்.சி.ஏ மைதானத்தில் 28.5.2023 அன்று மாலை நடைபெற்றது. பல்வேறு நாட்டுப்புற கலை நிகழ்ச்சிகளுடன் தொடங்கிய விருது வழங்கும் நிகழ்ச்சிக்கு விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தோழர் தொல்.திருமாவளவன் தலைமை

தாங்கினார். விடுதலை சிறுத்தைகள் கட்சியின் பொதுச் செயலாளர்கள் தோழர் சிந்தனைச் செல்வன், தோழர் ரவிக்குமார் ஆகியோர் முன்னிலை வகுத்தனர். தமிழ்த்தாய் வாழ்த்தினைத் தொடர்ந்து முதலாவதாக வழங்கப்பட்ட அம்பேத்கர் சுடர் விருதை விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தோழர் தொல்.திருமாவளவன் வழங்க இகக(மாலெ) பொதுச் செயலாளர் தோழர் திபங்கர் பெற்றுக் கொண்டார். அதனைத் தொடர்ந்து பெரியார் ஒளி விருது, காமராஜர் கதிர் விருது, மார்க்ஸ் மாமணி விருது, அயோத்திதாசர் ஆதவன் விருது, காயிதே மில்லத் பிறை விருது, செம்மொழி ஞாயிறு விருது ஆகியவற்றை தோழர் தொல்.திருமாவளவன் அவர்கள் வழங்கினார்கள். விருதினை வழங்குவதற்கு முன்னதாக விருது பெறும் தலைவர்கள் மற்றும் சான்றோர்கள் பற்றி தோழர் தொல். திருமாவளவன் அவர்கள் உரையாற்றி னார். மேலும் அவர்கள் பற்றிய ஒளிப்படமும் மேடையில் திரையிடப்பட்டது.





விருதுகள் தலைவர்களுக்கும் சான்றோர் களுக்கும் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து தலைவர்கள் தங்களுடைய ஏற்புரையை வழங்கினார்கள். தோழர் தொல்.திருமாவளவன் பேசிய போது, இன்று இந்தியாவிற்கு ஒரு கருப்பு நாள் என்றும், புதிய நாடாளுமன்றக் கட்டடத்தை மோடி திறந்து வைத்தார் அந்த நிகழ்ச்சிக்கு இந்திய குடியரசுத் தலைவர் அழைக்கப் படவில்லை, ஆனால், மடாதிபதிகள் அழைக்கப் பட்டார்கள். மடாதிபதிகள் உள்ளே, ஜனாதிப தியோ வெளியே இதுதான் சனாதனம் என்று கூறினார்.



விருது வழங்கும் விழாவில் இகக(மாலெ) அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் தோழர் வீ.சங்கர், மத்தியக்குழு உறுப்பினர்கள் தோழர் பாலசுந்தரம், தோழர் பாலசுப்பிரமணியன், தோழர் சந்திரமோகன், தமிழ்நாடு மாநிலச் செயலாளர் தோழர் பழ.ஆசைத்தம்பி, மத்திய கட்டுப்பாட்டுக்குழு உறுப்பினர் தோழர் கிருஷ்ணவேணி, மாநில நிலைக்குழு உறுப்பினர்கள் ஜி.ரமேஷ், சிம்சன், இரணியப் பன், கே.பாலசுப்பிரமணியன், வளத்தான், மாநிலக்குழு உறுப்பினர்கள் கண்ணையன், வரதராஜன், தனவேல், ராஜசங்கர், அதியமான், சி.ரங்கசாமி உள்ளிட்ட பல தோழர்கள் இகக(மாலெ) கட்சியின் சார்பாக கலந்து கொண்டனர். ❑



# டாக்டர் அம்பேத்கர் எந்தப் பேரழிவுக்கு எதிராக நமக்கு எச்சரிக்கை விடுத்தாரோ அந்தப் பேரழிவு ஏற்படப்போகும் அச்சுறுத்தலைக் கண்டு இந்திய மக்களாகிய நாம் விழித்தெழ வேண்டிய தருணம் இது




விடுதலைச் சிறுத்தைகள் கட்சி அம்பேத்கர் சுடர் வழங்கிய நிகழ்ச்சியில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி(மாலெ) பொதுச் செயலாளர் தோழர் திபங்கர் ஆற்றிய ஏற்புரை

*மதிப்பிற்குரிய தலைவர் தோழர் திருமாவளவன் அவர்களே, தோழர்கள் சிந்தனைச் செல்வன், துரை.ரவிக்குமார் மற்றும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் இதர தலைவர்களே, விசிகவின் உறுப்பினர்களே, என்னோடு சேர்ந்து விருதுகளைப் பெறுகின்ற மரியாதைக்குரிய தோழர்கள் டி.ராஜா, தோழர் கே. பாலகிருஷ்ணன், திரு. அப்பாவு, திருமதி தாயம்மாள் அறவாணன், திரு. மோகன் கோபால், திரு. ராஜேந்திர பால் கவுதம் அவர்களே, தோழர்களே, நண்பர்களே! வணக்கம்!*

*உங்கள் அனைவருக்கும் இனிய மாலை வணக்கம்.*

*இந்திய அரசின் செங்கோல்களைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருப்பவர்களிடமிருந்து இந்திய அரசமைப்புச் சட்டத்திற்கு இடைவிடாத தாக்குதல்கள் வந்து கொண்டிருக்கின்றன. சமூக சமத்துவத்திற்கும் சமூகத்தில் ஏற்றம் பெறுவதற்குமான போராட்டம் திட்டமிட்ட முறையில் பின்னுக்குத் தள்ளப்பட்டுக் கொண்டி ருக்கிறது. சுதந்திர, பன்மைத்துவ இந்தியாவில் அரசமைப்புச் சட்டத்தால் உரிமைகள் வழங்கப்பெற்றுள்ள மக்கள் அச்சமூட்டுகிற வகையில் இராணுவக் கட்டுப்பாடு போன்ற கடுமையான ஒழுங்குக் கட்டுப்பாட்டிற்கும் வெறுப்பு நிறைந்த பிரிவினைக்கும் உட்படுத்தப்பட்டிருக்கின்றனர். இப்படிப்பட்ட சூழலில், இந்திய அரசமைப்புச் சட்டத்தின் முதன்மைச் சிற்பியும் சாதியை ஒழித்துக் கட்டும்படி ஒடுக்கப்பட்ட மக்களுக்கு அறைகூவல் விடுத்தவருமான பாபா சாகேப் அம்பேத்கர் பெயரால்*

**சாதி என்பது உழைப்புப் பிரிவினைதான் என்று கூறி அதை நியாயப் படுத்தும் கருத்தை நிராகரித்த அவர், சாதி என்பது உழைப்பாளர்களின் பிரிவினையே என்று கூறி, உழைப்பாளிகள் அல்லது தொழிலாளர்கள் ஒரு சுயேச்சையான வர்க்கமாக ஒன்றிணைக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி வந்தார்.**

வழங்கப்படும் விருதினை மிக்க பணிவுடன் பெற்றுக் கொள்கிறேன்.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தோழர்களே, இந்த இனிய வியப்பை எனக்கு ஏற்படுத்தியதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அண்மைக்காலத்தில், சமுக மாற்றத்துகாக இந்தியாவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இயக்கத்தில் பல்வேறு நீரோட்டங்கள் நெருக்கமாக வந்து கொண்டிருப்பது வரவேற்கத் தக்கதாகும். இதை நம்மால் இந்தியா முழுவதிலும் வலுவான பாசிச எதிர்ப்பு இயக்கத்தைக் கட்டுவதற்கு முன்னெடுத்துச் செல்ல முடியும் என்று உளமார நம்புகிறேன்.

டாக்டர் அம்பேத்கர் சாதியை ஒழித்துக்கட்ட வேண்டும் என்ற அறைகூவலை மட்டுமே நமக்குத் தரவில்லை. அந்தத் திசையில் நாம் முன்னேறிச் செல்வதற்கான வழிகளையும் சுட்டிக் காட்டியுள்ளார். சாதி என்பது உழைப்புப் பிரிவினைதான் என்று கூறி அதை நியாயப் படுத்தும் கருத்தை நிராகரித்த அவர், சாதி என்பது உழைப்பாளர்களின் பிரிவினையே என்று கூறி, உழைப்பாளிகள் அல்லது தொழிலாளர்கள் ஒரு சுயேச்சையான வர்க்கமாக ஒன்றிணைக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி வந்தார். டாக்டர் அம்பேத்கர் விட்டுச் சென்ற சுதந்திரத் தொழிலாளர் கட்சியின் புகழ்மிக்க மரபு, சமுதாய மாற்றத்துக்கான நமது தேடலுக்கு உத்வேகத்தையும் ஆழ்ந்த புரிதலையும் வழங்குகின்ற செல்வக் களஞ்சியமாக விளங்குகிறது. அதே போன்றதுதான் வைசிராயின் நிர்வாகக் குழுவில் அவர் தொழிலாளர் அமைச்சராக இருந்தபோது உழைக்கும் வர்க்கத்தின் உரிமைகள் சாதிக்கப்படுவதில் வழங்கிய பங்களிப்புமாகும். கோவில் நுழைவு உரிமை என்பதற்கு மேல் அவர், பொது மூல வளங்கள் அனைத்தும் சமுதாயத்திலிருந்து விலக்கப் பட்டிருந்த மக்களும் சரிசமமாக அடையப் பெற வேண்டும் என்பதை விரும்பினார். அனைத்து சாதியினரும் கலந்துண்ணுவதைவிட, அகமண முறை மூலம் சாதி மறுஉற்பத்தி செய்யப் படுவதைத் தடுப்பதற்காக சாதி மறுப்புத் திருமணங்களுக்கு அழுத்தம் கொடுத்தார். பெண்கள் தங்கள் வாழ்க்கையில் சுதந்திரமான தேர்வுகளை மேற்கொள்வதற்கான உரிமைகளைப் பெறுவதற்காக அவர் ஓய்வொழிச்சல் இன்றிப் பாடுபட்டார்.

ஆழமாக வேரூன்றியிருந்த சமூக அநீதிக்கு எதிரான உறுதியான நடவடிக்கையாக அவர் இட ஒதுக்கீட்டை அறிமுகப்படுத்தி, இந்தியாவில் ஒடுக்கப்பட்ட மக்கள் "கல்வி, கிளர்ச்சி, அமைப்பாகுதல்" என்ற மும்மைக் கோட்பாட்டைக் கடைப்பிடித்து முன்னேறிச் செல்லுமாறு கூறினார். இன்று இட ஒதுக்கீட்டுக்கும் கல்விக்குமான உரிமை புதுப்பிக்கப்பட்ட தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கிறது, இட ஒதுக்கீட்டுக்கு குழி பறித்தல், கல்வியைத் தனியார்மயமாக்குதல், வேலைகளைத் தற்காலிக மானவையாக்குதல் என்பன, இந்தியாவின் ஒடுக்கப்பட்ட, ஏதுமற்ற ஏழைகள் சமுதாயத்தில் ஏற்றம் பெறுவதற்கும் சமத்துவத்திற்காக முன்னோக்கிச் செல்வதைத் தடுக்கும் பொருட்டு அவர்கள் மீது தாக்குதல் நடத்துவதற்கான திரிசூலமாகப் பயன்படுத்தப்படுகின்றன.

சென்னைக்கு வரும் வழியில் நான் ஒரு நாள் நாக்பூரில் தங்கியிருந்து தீட்சாபூமிக்குச் சென்று பார்த்தேன். டாக்டர் அம்பேத்கரும் அவரைப் பின்பற்றியவர்களும் பெருந்திரளாக பௌத்தத்தைத் தழுவிய நிகழ்வு, சாதிய ஒடுக்குமுறைக்குக் காட்டப்பட்ட மாபெரும் எதிர்ப்பும், பெருந்திரளான மக்களால் வேத நூல்கள் நிராகரிக்கப்பட்டதும், எவரொருவரும் தனது மதத்தைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள அரசமைப்புச் சட்டம் தந்துள்ள உரிமையை கூட்டாக ஒன்றிணைந்து வலியுறுத்திப் பயன்படுத்திக் கொண்டதும் ஆகும். இது, மனுவாதம், இந்திய பாசிசம் ஆகியவற்றின் கருத்தியல் தலைநகரமாக விளங்கும் நாக்பூரில் நிகழ்ந்தது குறிப்பிடத்தக்கது.

இந்திய அரசமைப்புச் சட்டம் அரசமைப்பு அவையால் ஏற்றுக்கொள்ளப்படும் தருணத்தில், டாக்டர் அம்பேத்கர் சில தெளிவான எச்சரிக்கைகளை விடுத்தார். அனைவருக்கும் வாக்குரிமை தரப்பட்டதைக் கொண்டு திருப்தியடையாமல், பொருளாதார, சமூக ஏற்றத்தாழ்வுகளை நாம் கடுமையாக எதிர்த்துப் போராட வேண்டும் என்று கூறினார். இந்த ஏற்றத்தாழ்வுகள் தடுத்து நிறுத்தப்படாவிட்டால் வாக்குகளால் தரப்படும் சமத்துவம் அர்த்தமிழந்துவிடும் என்று எச்சரித்தார். டாக்டர் அம்பேத்கரைப் பொறுத்தவரை சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியன ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்துள்ள தொகுப்பு; அந்தத் தொகுப்பால் மட்டுமே சாதி அமைப்பால் ஏற்படுத்தப்படும் தீட்டையும் களங்கத்தையும் முடிவுக்குக் கொண்டு வர முடியும். இன்று தலித்துகள் பல்வேறு

நிலைகளில் புதுப்பிக்கப்பட்ட விலக்குகளை அனுபவித்துக் கொண்டிருக்கையில், முஸ்லிம்கள் அப்பட்டமாக விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்டு ஐரோப்பாவில் யூதர்களுக்கு நேர்ந்தது போல, அவர்களுக்கென்று ஒதுக்கப்பட்ட தனியிடங்களில் மட்டுமே வாழவேண்டிய புதிய தலித்துகளாக உருவாகிக் கொண்டிருக்கின்றனர். கிறிஸ்தவர்களும்கூட இந்தியாவின் பல பகுதிகளில் அதிகரித்துவரும் காழ்ப்புணர்வுகளை மட்டுமல்ல, வன்முறைத் தாக்குதல்களையும் எதிர்கொண்டுள்ளனர். இன்று இந்தியாவில் பக்தி வழிபாடு என்பது அறிவையும் தகவல்களையும் பரப்புகின்ற அமைப்பு முழுவதையும் விட முக்கியமான தாக்கப் பட்டுள்ளது. எல்லாவற்றுக்கும் மேலாக, பாபாசாகேப் அம்பேத்கர், இந்து இராஜ்ஜியம் இந்தியாவில் யதார்த்தமானதொன்றாக ஆகி விடுவதை அனுமதிப்பதற்கு எதிரான மிகக் கூர்மையான எச்சரிக்கையை விட்டுச் சென்றுள்ளார். இந்து இராஜ்ஜியம் என்பது, இந்தியாவிற்கு ஏற்படும் பேரழிவு என்றும் நாம் எந்த விலையேனும் கொடுத்து அது ஏற்படுவதைத் தடுக்க வேண்டும் என்றும் கூறினார்.

நாம் சென்னையில் கூடியிருக்கும் இன்று, இந்திய மக்கள் தொற்று நோய்ப் பரவலின் காரணமாக அவதியுற்றுக் கொண்டிருந்தபோது இந்தியாவின் கருவூலத்திற்குப் பெரும் செலவு ஏற்படுத்தும் வகையில் கட்டப்பட்டுள்ள நாடாளுமன்றப் புதுக் கட்டடம், தன்னைத்தானே உயர்வாகக் கருதிக் கொண்டிருக்கும் பிரதமரால் அரசமைப்புச் சட்டத்தின் உணர்வையும் அதற்குள்ள மரியாதையையும் வெட்கமும் நாணமும் சிறிதுமின்றி மீறும் வகையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. சங்-பாஜக நிறுவனம், இந்தியாவிற்கு முதல் ஆதிவாசி குடியரசுத் தலைவரும், அதற்கு முன் ஒரு தலித் குடியரசுத் தலைவரும் கொடுக்கப்பட்டுள்ளதற்கு உரிமை கொண்டாடுகிறது. ஆனால் புதிய நாடாளுமன்றக் கட்டடத்திற்கான அஸ்திவாரம் இடப்பட்ட போதோ, அக்கட்டடம் திறந்து வைக்கப்பட்ட போதோ, அந்த இரு குடியரசுத் தலைவர்க ளுக்கும் அரசமைப்புச் சட்டம் வழங்கியுள்ள தகுதியும் மரியாதையும் மறுக்கப்பட்டுள்ளன. அது மட்டுமின்றி, புதிய நாடாளுமன்றக் கட்டடத்திலும் அதன் திறப்பு விழாவிலும் ஜனநாயக விரோத, குடியரசு விரோதக் குறியீடுகள் நிரம்பியுள்ளன என்ற உண்மையைப் பார்க்க நாம் தவறிவிடக் கூடாது. ஒரு மதச்சார்பற்ற குடியரசிலுள்ள ஜனநாயகத்தின் உறைவிடமான நாடாளுமன்றக் கட்டடத் திறப்பு விழா, ஒரு முடியாட்சியில் அரசனுக்கு முடிசூட்டுவது போன்றதை ஒத்திருப்பதால், நிச்சயமாக அதில் ஒரு கடும் தவறு இருக்கிறது என்பதுதான் பொருள். அது நமது அரசமைப்புச் சட்டத்தின் முகப்புரையில் வெளிப்படுத்தப் பட்டுள்ள உணர்வும், பார்வையும் மிக தெளிவாக மறுக்கப்படட்டுள்ளதைத்தான் குறிக்கின்றது.

சில நாள்களுக்கு முன்புதான் உச்ச நீதிமன்றம், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட டெல்லி அரசாங்கத்திற்குள்ள நிர்வாக அதிகாரத்தை உறுதி செய்து, ஒன்றிய அரசாங்கம் துணை ஆளுநரின் மூலம் டெல்லி அரசாங்கத்திற்குள்ள கூட்டாட்சி உரிமைகளுக்குள் ஊடுருவக் கூடாது என்று கூறியது. அரசமைப்புச் சட்ட விவகாரங்களை விசாரணை செய்வதற்காக உச்சநீதிமன்றம் அமைத்த அரசியல் சாசன அமர்வின் (Constitutional Bench) தீர்ப்பை இரத்து செய்யும் வகையில் நிர்வாக இயந்திரம் ஓர் அவசரச் சட்டத்தைப் பிறப்பித்து, நீதித்துறையின் மீதான போரை அறிவித்துள்ளது. டாக்டர் அம்பேத்கர் எந்தப் பேரழிவுக்கு எதிராக நமக்கு எச்சரிக்கை விடுத்தாரோ அந்தப் பேரழிவு ஏற்படப்போகும் அச்சுறுத்தலைக் கண்டு இந்திய மக்களாகிய நாம் விழித்தெழ வேண்டிய தருணம் இது. தோற்கடிக்கப்பட வேண்டிய ஓர் அழிவும் வென்றெடுக்கப்பட வேண்டிய ஒரு கனவும் சுரண்டலிலிருந்தும் ஒடுக்குமுறையிலிருந்தும் விடுதலை பெற்ற ஒரு நவீன இந்தியாவுக்காக நமது சுதந்திரப் போராட்ட வீரர்களும் தங்களிடமிருந்த அனைத்தையும் தியாகம் செய்தவர்களும் கண்ட கனவும் நம் முன் நிற்கின்றன.

இந்த ஆண்டின் அம்பேத்கர் சுடர் விருதை சிபிஐ (எம்எல்) சார்பிலும் இந்தியப் புரட்சிகரக் கம்யூனிஸ்டுகள் முகாமின் சார்பிலும் பணிவுடன் பெற்றுக்கொள்வதுடன், சாதியை அழித்தொழிக் கின்ற பணிக்கும் இந்தியாவை ஒரு வலுவான ஜனநாயகமாக, உறுதிமிக்க வகையில் மதசார்பற்ற, உயிர்த்துடிப்புள்ள பன்மைத்துவம் கொண்ட உண்மையான சோசலிச தேசமாக மாற்றுகின்ற பணிக்கும் என்னை நான் மீண்டும் அர்ப்பணித்துக் கொள்கிறேன். உங்கள் அனைவருக்கும் நன்றி.

இன்குலாப் ஜிந்தாபாத்! ❑

# புதிய நாடாளுமன்றக் கட்டடத்தில், மன்னர்கள் காலச் செங்கோல்! தமிழர் பெருமிதமா, மதப்பண்பாட்டின் மீட்டுருவாக்கமா ?

அ.சந்திரமோகன்

*காந்தி கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட சாவர்க்கர் பிறந்த நாளான மே28ம் தேதியன்று, புதிய நாடாளுமன்றக் கட்டடத் திறப்புவிழா தேர்வு செய்யப்பட்டதற்கு எதிர்கட்சிகள் கடுமையாக எதிர்ப்பு தெரிவித்த போதும், அதேநாளில் புதிய நாடாளுமன்றம் ஆரவாரமாக திறக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சிக்கு தமிழ்நாட்டின் சைவ மடாதிபதிகள் / ஆதீனங்கள், சைவப் பண்டாரங்கள் சிறப்பு விருந்தினர்களாக அழைக்கப்பட்டனர். 'பழங்குடியினரான குடியரசு தலைவர் விழாவிற்கு அழைக்கப்படவில்லை' என்பதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் பல்வேறு கட்சிகளும் விழாவைப் புறக்கணித்தன.*

*புதிய நாடாளுமன்ற கட்டடத் திறப்புவிழாவுக்கு ஒருவாரத்திற்கு முன்பாக, "நாடாளுமன்றத்தில் தமிழ்நாட்டு செங்கோல்" என்ற பரபரப்பு அறிக்கைகள், செய்திகள் கட்டமைக்கப்பட்டன. மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா, "சோழர்களின் செங்கோல், தமிழ்நாடு ஆதீனங்களிடமிருந்து / சைவ மடாதிபதிகளிடமிருந்து பெறப்பட்டு அந்த நிகழ்ச்சியில் பிரதமரிடம் அளிக்கப்படும். நாடாளுமன்றத்திற்குள், சோழர் கால செங்கோலை பிரதமர் மோடி நிறுவுவார்" என விறுவிறுப்பாக அறிவித்தார். தமிழ்நாடு பாஜக தலைவர் அண்ணாமலை, "நமது மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு, சோழர் காலத்துச் செங்கோல் வழங்கப்படவிருக்கிறது. தமிழ்க் கலாச்சாரத்தைத் தேசிய அரங்கில் மீட்டெடுத்ததற்காக, மாண்புமிகு பிரதமர் அவர்களுக்குத் தமிழக மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்." என்று தமிழர் பெருமிதம் பேசினார்.*

**புதிய நாடாளுமன்றத்தில், இந்தி, ஆங்கிலம், சம்ஸ்கிருத மொழிகளில் மட்டுமே திறப்புவிழா கல்வெட்டுகள் அமைக்கப்பட்டுள்ளன.**

*"நமது தேசிய வரலாற்றுச் சின்னமான புனித செங்கோலை, 28 மே'23 அன்று புதிய நாடாளுமன்றத்தில் பிரதமர் நிறுவுகிறார்." என்று பாஜக தலைவர் திருமதி வானதி சீனிவாசன் எம்எல்ஏ அறிவித்ததன் மூலமாக, மன்னராட்சி அடையாளமான செங்கோலை "தேசிய வரலாற்று சின்னம்"என்ற மட்டத்திற்கு கொண்டு சென்றார்.*

*சென்னை உம்மிடி பங்காரு செட்டியார் தயாரித்த செங்கோலை, பாஜக வினர் "சோழர்கள் செங்கோல்" என்றனர். அதற்கடுத்து, "திருவாவடுதுறை ஆதீனம் பரிசளித்த செங்கோல்" எனத் திருத்தினர்.*

## அரசியலில், இந்து மதத்தை கலப்பது

*தமிழ்நாடு சைவ மடாதிபதிகள், சிவாச்சாரியார்களை டில்லிக்கு வரவழைத்தது, பாஜக அரசாங்கம். பிரதமரின் இல்லத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 21 சைவ ஆதினங்களும் பங்கேற்க, மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன்,*



இணையமைச்சர் எல். முருகன் சாட்சியமாக, புதிய நாடாளுமன்ற வளாகத்தில் அடுத்த நாள் வைக்கப்பட இருந்த செங்கோலை திருவாவடுதுறை ஆதினத்திடம் இருந்து பெற்றுக் கொண்டார் பிரதமர் மோடி.

புதிய நாடாளுமன்ற கட்டடத் திறப்பு விழாவில், ஒருபுறம் ஸ்மார்த்த பிராமணர்கள் வேள்வி பூஜை புனஸ்காரம் செய்ய, மற்றொரு புறம் சைவ மட ஆதீனங்கள் சாட்சியமாக செங்கோலை விழுந்து வணங்கிய பிரதமர் மோடி, பண்டார சன்னதிகளிடம் ஆசி வாங்கிக் கொண்டு மக்களவை சபாநாயகர் இருக்கை அருகே செங்கோலை நிறுவினார். மக்களாட்சி அமைப்பில் பிரதமராக தேர்வு செய்யப்பட்ட மோடி ஒரு சோழ மன்னர் போலவும், மடாதிபதிகள் சோழர் கால செங்கோலை அவருக்கு வழங்குவதாகவும் திரைக்கதையை விஞ்சும் ஒரு கதையாடல் அரங்கேற்றம் செய்யப்பட்டது.

**செங்கோலும், சைவ மடங்களும்:**

வரலாற்று ரீதியாக, சைவ மடங்களுக்கும், மடாதிபதிகளுக்கும், மன்னராட்சிகளுடன் (சோழர்கள், பாண்டியர்கள், சேரர்கள், விஜயநகர பேரரசு, மதுரை நாயக்கர் அரசு, தஞ்சாவூர் மராட்டிய அரசு, திருவிதாங்கூர் ராஜ்ஜியம், சேதுபதி மன்னர்கள் என அனைவருடனும்) நெருங்கிய தொடர்பு, உறவு இருந்தது. செங்கோல் வைத்திருப்பது மன்னராட்சி அதிகாரத்தின் சின்னமாக, மன்னராட்சி மரபாக இருந்து வந்துள்ளது. ஆட்சியதிகாரத்திற்கு அச்சுறுத்தல் வரும்போது எல்லாம், மன்னர்கள் தங்கள் செங்கோலையும், கிரீடத்தையும் மறைத்து வைக்கும் இடங்களாக மடங்களைப் பயன்படுத்தி வந்திருக்கின்றனர். மன்னர்கள் முடிசூட்டும் போது கிரீடத்தை எடுத்துக் கொடுக்கும் உரிமை மடாதிபதிகளுக்கு உண்டு. முடிசூட்டும் போது, செங்கோலையும் கொடுக்கும் வழக்கம் இருந்திருக்கிறது. தற்போது அதே செங்கோல் தமிழர் பெருமிதத்தை உசுப்பேற்ற, மடங்களை, சைவ வெள்ளாளர் சமூகத்தை தங்கள் பிடிக்குள் கொண்டு வர ஆர்எஸ்எஸ்– பாஜக அரசியல் செயல்தந்திரத்தின் ஒரு கருவியானது.

**அரசியல், வரலாற்றுப் புரிதல் முக்கியமானது:**

செங்கோல் வைத்திருப்பது மக்களாட்சி மரபு அல்ல! ஒரு குடியரசில் அரசியலமைப்புச் சட்டத்தை உயர்த்திப் பிடிக்க வேண்டிய, நாட்டின் பிரதமர் மன்னராட்சி அடையாளமான செங்கோலை ஏந்துகிறார். கர்நாடக மக்கள் பாஜகவை கைகழுவியதால், தமிழ்நாட்டு மக்களை அரசியல் ரீதியாக ஈர்க்க, தமிழ்நாட்டு ஆர்எஸ்எஸ் சேவகர்களும், பாஜக தலைவர்களும், “புதிய பாராளுமன்றத்தில் சோழர்கால செங்கோல்” எனக் கூப்பாடு போடுகிறார்கள்; “தமிழருக்குப் பெருமை” என உசுப்பேற்றுகிறார்கள். தமிழர் பெருமையை தேசிய மட்டத்தில் கொண்டு செல்வதற்கு பாஜகவினர் தான் காரணம் என “அடையாள அரசியல்” செய்வதும் நடக்கிறது.

செங்கோல் ஒரு மன்னராட்சி மாண்பு ஆகும். இந்து மதப் பண்பாட்டை உயர்த்திப் பிடிப்பதாகும். பாஜக நீண்ட காலமாக, சைவ வெள்ளாள மடாதிபதிகளை உள்ளிழுக்கும் மதம் சார்ந்த பல்வேறு நிகழ்ச்சிகளை கட்டமைத்து

வருகிறது. தமிழ்நாடு ஆளுநர் மற்றும் பாஜக தலைவர்கள் மடங்களின் நிகழ்ச்சிகளில் நேரடியாக கலந்து கொள்கின்றனர். மடங்கள் ஆர்எஸ்எஸ் சாகாக்கள், பயிற்சி கூடங்களாக மாறிவருகின்றன. இதன் தொடர்ச்சியாக, மடாதிபதிகளை, சைவ ஆதீனங்களை செங்கோல் வழங்கும் நிகழ்ச்சியில் முன்னிறுத்துவதும் நடைபெற்றது. செங்கோல் விஷயத்தில், வெள்ளாளர், வேளாளர் சாதிச் சங்கங்கள் மோடியை உச்சிமோந்து கொண்டாடுகின்றன.

அரசியல் கட்சிகள், சாதிய சங்கங்கள் மற்றும் தமிழ் தேசிய அறிவாளிகள் சிலரும், விமர்சன மற்ற முறையில், சோழர் கால ஆட்சியை புகழ்பாடுவது நடைபெறுகிறது.

சோழர்கள் காலத்தில் சைவம் அரச மதமாக திகழ்ந்தது. அன்றைய காலத்தில், ஒருபுறம் மன்னர்களை வழிநடத்துவதில், சைவ நெறிகள்/ வேதாகம தர்மம் செழிக்க வைப்பதில் மடாதிபதிகளின் பங்கு முக்கியமானது. மற்றொரு புறம், சோழர்கள் காலத்தில் நிலமானியங்கள் பெற்றது வழியாக உருவான பிராமண, வெள்ளாள நிலவுடமை ஆதிக்கம் ஏழை விவசாயிகளை ஒட்டச் சுரண்டியது.

மடங்களின் ஆதிக்கம், இன்றளவும் இலட்சக்கணக்கான குத்தகை விவசாயிகள் மீது பிணச்சுமையாக நீடிக்கிறது. வரலாறு நெடுக ஆட்சியாளர்களுக்கு சேவை செய்வதில், பார்ப்பனீயமும், வெள்ளாளியமும் கரங்கோர்த்து சென்றுள்ளன. கோவில் நிலவுடமை அமைப்பின் தளகர்த்தர்களாக நின்று கொண்டு மக்களை, விவசாயிகளை சுரண்டுவதில் ஒன்றுபட்டு தான் செயல்பட்டுள்ளார்கள்.

**புதிய நாடாளுமன்றத்தில் தமிழ் மொழிக்கு இடமில்லை தமிழர் பண்பாட்டு அடையாளங்களும் இல்லை.**

புதிய நாடாளுமன்றத்தில், இந்தி, ஆங்கிலம், சம்ஸ்கிருத மொழிகளில் மட்டுமே திறப்புவிழா கல்வெட்டுகள் அமைக்கப் பட்டுள்ளன. “தமிழ் மொழி உலகின் பழமையான மொழி எனவும், செங்கோல் தமிழ்நாட்டின் புகழ்பெற்ற கலாச்சாரம்” எனவும் பிரதமர் மோடி மற்றும் பாஜகவினரால் ஆரவாரமாக அறிவிக்கப் படுகிறது. ஆனால், புதிய நாடாளுமன்ற திறப்புவிழா கல்வெட்டுகளில், தமிழ் மொழியைக் காண முடியவில்லை. இனிமேல், “இந்தி – ஆங்கிலம் – சம்ஸ்கிருதம் மட்டுமே” புதிய நாடாளுமன்ற மும்மொழிக் கொள்கை யாகத் திகழும் போலும்!

புதிய பாராளுமன்ற கட்டிடத்தில், கலைக் கூடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அதில், இந்து கலாச்சாரத்தை சித்தரிக்கும் காட்சிகள் அமைக்கப்பட்டுள்ளது. மகாபாரத போர், கிருஷ்ணன், சாணக்கியன், சிவாஜி எனப் பலரும் காட்சிப்படுத்தப் பட்டுள்ளார்கள். சாணக்கியன், சாவர்க்கர், ஆர்எஸ்எஸ் விரும்பிய அகண்ட பாரத காட்சிகள் உள்ளது. ஆனால், தமிழர் பண்பாட்டை பறைசாற்றும் காட்சிகள் எதுவும் இல்லை.

எனவே, சோழர் செங்கோல், தமிழ், தமிழர் பெருமை பற்றிய பாஜக பரப்புரைகள் அனைத்தும் மோசடிகளே! ஆர்எஸ்எஸ் சதிகள் அம்பலப்படுத்தப் படவேண்டும். ❑




**உலக அரங்கில் இந்தியாவிற்கு பதக்கங்களை வென்று கொடுத்த மல்யுத்த வீராங்கனைகளிடம் பாலியல் வன்கொடுமை செய்த பாஜகவின் நாடாளுமன்ற உறுப்பினரான பிரிஜ் பூஷன் சிங்கைக் கைது செய்யாமல் பாதுகாக்கும் மோடியின் ஒன்றிய அரசு, குற்றவாளியைக் கைது செய்யக் கோரிய மல்யுத்த வீராங்கனைகளைக் கைது செய்தது புதிய நாடாளுமன்ற கட்டடத் திறப்பு அன்று**

# பாஜகவிற்கு தென்னிந்திய நுழைவாயில் மூடப்பட்டது!

*கர்நாடகா தேர்தலின் ஆரவாரம் இப்போது அடங்கிவிட்டது. சித்தராமையா தலைமையில் காங்கிரஸ் ஆட்சி பொறுப்பேற்று உள்ளது. சட்டமன்றத்தில் காங்கிரசுக்கு பெரும்பான்மை பலம் அளித்துள்ள கர்நாடக மக்கள், அடுத்த 5 ஆண்டுகளுக்கு நிலையான ஆட்சியையும், தங்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படுவதையும் எதிர்நோக்கியுள்ளனர்.*

*2018ல் பாஜக பெரிய கட்சியாக உருவெடுத்தது. ஊழல் "ஆபரேஷன் கமலா" வழியாக பிளவுகளை ஏற்படுத்தியதன் மூலமும் எம்எல்ஏக்களை விலைக்கு வாங்கியதன் மூலமும் ஓர் ஆண்டுக்குப் பிறகு அது ஆட்சியை அபகரித்தது. அரசாங்கம் அதன் மதவெறி, சாதிவெறி, கார்ப்பரேட் நிகழ்ச்சி நிரலை எவ்விதக் கூச்சமுமின்றி பின்பற்றியது. உண்மையில் வரலாறு காணாத ஊழல், விலைவாசி உயர்வு, வாழ்க்கை நடத்துவதற்கான செலவின் அதிகரிப்பு, வீழ்ச்சியடைந்த உள்கட்டமைப்பு, விவசாயிகள், தொழிலாளர் விரோதச் சட்டங்கள், விண்ணைத் தாண்டிய வேலையின்மை, அதிகரித்த கடன்சுமையால் முடங்கிய மாநில பொருளாதாரம், பெண்களுக்கு எதிரான வன்முறை, அவர்களின் சுதந்திரம், தன்னாட்சி மீதான தாக்குதல்கள், அதிகரித்து வரும் சாதி பாகுபாடுகளும் அட்டூழியங்களும், வகுப்புவாத நல்லிணக்கமின்மையும் மதம் சார்ந்த வெறுப்பும் என்ற அதன் வரலாற்றுக்கு பொருத்தமானதாக இந்த பாஜகவின் ஆட்சி இருந்தது.*

**கர்நாடகாவில் பாஜகவிற்கு ஏற்பட்டுள்ள தீர்மானகரமான தோல்வி மற்ற மாநிலங்களில் பாஜக ஆட்சியை இழக்கும் போக்கிற்கு வலிமை சேர்க்கிறது.**

*காங்கிரஸ் 43% வாக்குகளுடன் 135 இடங்களை வென்றது. இவை இரண்டும் 1989 லிருந்து கர்நாடகாவில் எந்தக் கட்சியும் பெற்றதை விட மிகமிக அதிக எண்ணிக்கைகள் ஆகும். 2018 தேர்தலில் 38.1% வாக்குகளுடன் 80 இடங்களை காங்கிரஸ் வென்றது. தென்னிந்தியாவிலேயே பாஜகவிற்கு சிறந்த தேர்தல் வெற்றி கிடைத்த ஒரே மாநிலம் கர்நாடகா தான். மேலும் தென்னிந்தியாவில் பாஜக ஆட்சியைக் கண்ட ஒரே மாநிலமும் கர்நாடகா தான். 2018 தேர்தலில் 36.2% வாக்குகளைப் பெற்று 104 இடங்களை கைப்பற்றியதுடன் ஒப்பிடுகையில், இம்முறை பாஜக 36% வாக்குகளுடன் 66 இடங்களை மட்டுமே கைப்பற்ற முடிந்தது. மதச்சார்பற்ற ஜனதாதளம் 13 சதவீத வாக்குகளுடன் 19 தொகுதிகளில் வெற்றி பெற்றது. 2018 தேர்தலில், மதச்சார்பற்ற ஜனதாதளம் 18% வாக்குகளுடன் 37 இடங்களை வென்றது. இது 1999க்குப் பிறகு அக்கட்சி பெற்ற மிகமிகக் குறைந்த எண்ணிக்கையாகும்.*

### பகுதி வாரியான செயல்பாடு:

*கர்நாடகாவின் நிலப்பகுதி ஆறு அரசியல் துணைப் பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது. அவை சமூக சேர்க்கைகள், பொருளாதாரப் பண்புகள், அரசியல் வரலாறு ஆகியவற்றின் அடிப்படையில் வேறுபாடுகளைக் கொண்டுள்ளன. இவை கடலோர கர்நாடகா, பழைய மைசூர், மத்திய கர்நாடகா, கித்தூர்*

கர்நாடகா (மும்பை கர்நாடகா) கல்யாண கர்நாடகா (ஹைதராபாத் கர்நாடகா) மற்றும் பெங்களூரு மாநகராட்சி பகுதி எனப்படும். பாரம்பரியமாக ஒவ்வொன்றும் பல்வேறு கட்சி களின் கோட்டைகளாக இருந்து வருகின்றன. கடலோர கர்நாடகாவும் மத்திய கர்நாடகாவும் பாஜகவின் கோட்டைகளாக சொல்லப்படும் போது, ஹைதராபாத் கர்நாடகாவில் காங்கிரசும், பழைய மைசூரு பகுதியில் மதச்சார்பற்ற ஜனதாதளமும் வலுவாகக் காணப்படுகின்றன. பெங்களூரு விலும் ஓரளவிற்கு மும்பை கர்நாடகாவிலும் காங்கிரசும், பாஜகவும் மேலா திக்கத்திற்காகப் போட்டியிட்டு வருகின்றன.

**கடலோர கர்நாடகா:** இது பாஜகவின் பாரம் பரியக் கோட்டையாகும். அங்கு அது தனது இந்துத்துவா நிகழ்ச்சி நிரலை களத்தில் அமல் படுத்தியுள்ளது. அங்கு பாஜக வலுவாக செயல் பட்டு, மொத்தமுள்ள 19 இடங்களில் 13 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. இருப்பினும், இது 2018 ஐ விட 3 இடங்கள் குறைவானதாகும். மேலும் இந்த பகுதியில் அதன் வாக்குகளின் பங்கு 3.1% குறைந்துள்ளது. காங்கிரஸ் அதன் எண்ணிக்கையை 3லிருந்து 6 ஆக இரட்டிப் பாக்கி யும் அதன் வாக்குகளின் பங்கை 2.8% அதிகரித் தும், 2018 ஐ விட சிறப்பாக செயல்பட்டுள்ளது. இந்த இந்துத்துவா கோட்டையில் பாஜக சிறப்பாகச் செயல்பட்டிருந்தாலும், வாக்குகளின் பங்கு, வெற்றி பெற்ற இடங்களின் எண்ணிக்கை ஆகிய இரண்டிலும் காங்கிரஸ் அதன் 2018 செயல்பாட்டினைக் காட்டிலும் சிறப்பாகச் செயல்பட்டிருப்பதை யாரும் புறக்கணிக்க முடியாது.

**பழைய மைசூரு:** 64 இடங்கள் உள்ள இந்தப் பகுதி, மதச்சார்பற்ற ஜனதாதளம் பாரம்பரியமாக சிறப்பாக செயல்பட்டு வரும் பகுதியாகும். இருப்பினும் இந்த முறை, மதச்சார்பற்ற ஜனதாதளம் 2018 இல் பெற்ற 26 இடங்களுடன் ஒப்பிடும்போது 14 இடங்களை மட்டுமே வென்றுள்ளது. அதன்மூலம் 2018 இல் அது வென்ற இடங்களில் கிட்டத்தட்ட பாதியை இழந்துள்ளது. மேலும் அது இந்த பகுதியில் கிட்டத்தட்ட 7% வாக்குகளையும் இழந்துள்ளது. 2018ல் 20 இடங்களை பெற்றிருந்த காங்கிரஸ், இந்த முறை 43 இடங்களை பெற்றுள்ளதுடன், அதன் வாக்கு சதவீதம் 6.9% அதிகரித்துள்ளது. மறுபுறம், பாஜகவும் தனது வாக்கு சதவீதத்தை 2.8% அதிகரித்துள்ளது. இருப்பினும் அது பெற்ற இடங்கள் 16ல் இருந்து 5 ஆக குறைந்துள்ளது. மிகமிக முன்னதாகவே, மார்ச் 2023ல் மாண்டி யாவில் மோடியின் சாலைவழி பரப்புரையுடனும் பல கவர்ச்சிகரமான பேரணிகளுடனும் பாஜக வலுவாக முயற்சித்த பகுதி இதுவாகும். பாஜக இந்தப் பகுதியில் மேற்கொண்ட கவனக் குவிப்புக்கு ஏற்ப அது பெற்ற வாக்குகளின் பங்கு அதிகரிக்கவில்லை. மேலும், திப்பு சுல்தானால் உரிகவுடா நஞ்சேகவுடா கொல்லப்பட்ட புனைக் கதையைப் பயன்படுத்தி வொக்கலிகா வாக்கு வங்கியை வகுப்புவாதமயமாக்கும், அதில் துருவச் சேர்க்கையை உருவாக்கும் முயற்சியில் பாஜக தோல்வியடைந்தது. மேலும் அந்த சமூகத்திற்கு இடஒதுக்கீட்டை அதிகப் படுத்துவதன் மூலம் ஈர்ப்பதற்கு செய்யப்பட்ட முயற்சியும் கூட தோல்வியுற்றது. கட்சி விலகல்களும், தேவகவுடாவின் மகன்கள் ஹெச் டி குமாரசாமி, ஹெச் டி ராவன்னா இருவருக்கும் இடையிலான மேலாதிக்கப் போட்டிகளும் மதச்சார்பற்ற ஜனதாதளத்தின் வாய்ப்புகளை கடுமையாக பாதித்தது.

**கித்தூர் கர்நாடகா:** பாஜக பாரம்பரியமாக இந்த பகுதியில் சிறப்பாக செயல்பட்டுள்ளது. ஆனால் இந்த முறை அதற்கு கிடைத்த இடங்களின் எண்ணிக்கை 30 திலிருந்து 16 ஆகக் குறைந்துள்ளது. அதே நேரத்தில் அதன் வாக்கு சதவீதமும் 2.8% குறைந்துள்ளது. காங்கிரஸ் பெற்ற வாக்குகளின் பங்கு 5.1% அதிகரித்துள்ளது. அதன்மூலம் 16 இடங்கள் அதிகரித்து, இந்தப் பகுதியில் உள்ள 50 சட்டமன்றத் தொகுதிகளில் 33 இடங்களை அது வென்றுள்ளது. தெளிவாக, இந்த பகுதியில் பாஜகவின் கோட்டையை அசைப்பதில் காங்கிரஸ் வெற்றி பெற்றது. மேலும் முப்பதாண்டுகளில் முதல்முறையாக, இந்த பகுதியில் அதன் வாக்குகள் 40%க்கும் அதிகமாக உள்ளது.

**மத்திய கர்நாடகா:** காங்கிரஸ் இங்கு தனது வாக்குகளை 7.5% அதிகப்படுத்தியதன் விளைவாக அதற்குக் கிடைத்த இடங்கள் 4 லிருந்து 15 ஆக அதிகரித்தது. அதே நேரத்தில் பாஜக 10 இடங்களை இழந்து 6 இடங்களை மட்டுமே வென்றுள்ளது. மேலும் 2018 க்குப் பிறகு 4.9% வாக்குகளை இழந்துள்ளது.

**கல்யாண கர்நாடகா:** காங்கிரஸ் தனது பாரம்பரிய கோட்டையான இந்தப் பகுதியில் தனது வாக்குகளின் பங்கை 4.2% அதிகரித்து 46.4% ஆகவும், வெற்றிபெற்ற இடங்களின் எண்ணிக்கையை 21லிருந்து 26 ஆகவும் உயர்த்தியுள்ளது. இந்த பகுதியில் பாஜகவின்

வாக்கு சதவீதம் 3.1% குறைந்து, அது பெற்ற இடங்களின் எண்ணிக்கை 15லிருந்து 10 ஆக குறைந்துள்ளது. பட்டியல் சாதி வாக்காளர்கள் அதிக அளவில் குவிந்திருப்பதாலும், மல்லிகார்ஜுன் கார்கேயாலும் இந்த வலுவான பகுதியில் காங்கிரஸ் தனது வெற்றியை மேம்படுத்தியுள்ளதற்கு முக்கிய காரணமாகும். இந்த பகுதியில் உள்ள 40 இடங்களில் காங்கிரஸ் 26 இடங்களை வென்றுள்ள அதே நேரத்தில் பாஜக 10 இடங்களில் மட்டுமே வென்றது.

**பெங்களூரு பகுதி:** நகரம் முழுவதும் இரண்டு நாள் மேற்கொள்ளப்பட்ட சாலைவழிப் பரப்புரையின் மூலம் மோடி பிம்பத்தை நம்பி பாஜக வலுவான களத்தை உருவாக்கிய மற்றொரு பகுதி இதுவாகும். மத்திய கர்நாடகத்தைப் போலவே இப்பகுதியிலும் காங்கிரஸ், பாஜக இடையே கடும் போட்டி நிலவியது. இம்முறை காங்கிரஸ் பெற்ற தொகுதிகளின் எண்ணிக்கை 15ல் இருந்து 13 ஆகக் குறைந்து விட்ட போது, பாஜக பெற்ற தொகுதிகளின் எண்ணிக்கை 11ல் இருந்து 15 இடங்களாகவும் அதிகரித்தது. வாக்கு சதவீதத்தைப் பொறுத்தவரை, பாஜக 5.3% அதிகரிப்பை எட்டியுள்ளது. காங்கிரசும் அதன் வாக்கு சதவீதத்தை 1% அதிகரித்துள்ளது. 2018ல் வென்ற இரண்டு இடங்களிலும் மதச்சார்பற்ற ஜனதாதளம் தோல்வியடைந்துள்ளது.

**தனித் தொகுதிகள்:** 36 தொகுதிகள் பட்டியல் சாதியினருக்கும், 15 பழங்குடியின ருக்கும் என கர்நாடகாவில் இட ஒதுக்கீடு செய்யப்பட்ட 51 தனித் தொகுதிகள் உள்ளன. பட்டியலிடப்பட்ட சாதிகளுக்கு ஒதுக்கப்பட்ட தனித் தொகுதிகளில், பாஜக 12 இடங்களை வென்றது (2018 இல் 16 இடங்களிலிருந்து குறைந்து விட்டது). காங்கிரசுக்கு 12 இடங்களி லிருந்து 21 இடங்களாக அதிகரித்திருக்கிறது. மதச்சார்பற்ற ஜனதாதளம் 3 இடங்களை பெற்றது.

பட்டியலிடப்பட்ட பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்ட தனித் தொகுதிகளில் காங்கிரஸ் 14 இடங்களைக் கைப்பற்றியது (2018 இல் அது 8 இடங்களில் வெற்றி பெற்றிருந்தது). மீதமுள்ள 1 இடத்தை மதச்சார்பற்ற ஜனதாதளம் வென்றது. பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்ட ஒரு இடத்தைக் கூட பாஜக வெல்லத் தவறியது. மேலும் மாநிலத்தில் பெயர் பெற்ற எஸ்டி தலைவரும், போக்குவரத்து மற்றும் எஸ்டி நலத்துறை அமைச்சருமான பி.ஸ்ரீராமுலு, பல்லாரி ரூரல் தொகுதியில் தோல்வியடைந்தார்.

பட்டியல் சாதியினருக்கான இட ஒதுக் கீட்டை 15%லிருந்து 17% ஆகவும், பழங்குடியி னருக்கு 3% லிருந்து 7% ஆகவும் உயர்த்தி வழங்க பொம்மை அரசு முடிவு செய்த போதிலும் கூட, இந்த முழுமையான தோல்வி ஏற்பட்டுள்ளது. மத்திய அரசு இதற்கு ஒப்புதல் அளிக்கவில்லை என்பதால் இவை தேர்தல் வித்தைகளாகவே பார்க்கப்பட்டன. இதேபோல், பட்டியல் சாதியினரின் உள் இடஒதுக்கீடு குறித்த முடிவும் பாதகமாக திரும்பியது. ஏனெனில் இந்த முடிவு பல பட்டியலிடப்பட்ட சமூகங்களால் எதிர்க்கப்பட்டது. அதே நேரத்தில் உள் ஒதுக்கீட்டால் பயனடையும் சமூகங்கள் இதை ஒரு அரசியல் வித்தையாகக் கருதினர். ஏனெனில் மத்திய அரசு இதற்கும் அனுமதி தரவில்லை.

தெளிவாகவே, இட ஒதுக்கீட்டில் தலையிடும் பாஜகவின் சோதனை முயற்சியானது, சமூக, பொருளாதார நிலைமைகளில் அடிமட்டத்தில் தொடர்ந்து நலிந்து கொண்டிருக்கும் எஸ்சி/எஸ்டி சமூகத்தினரிடையே உள்ள அதிருப்தியை சரிசெய்யத் தவறிவிட்டது.

**பெண் வேட்பாளர்கள்:** 2023ல் நடந்த 16வது கர்நாடக சட்டமன்றத் தேர்தலில், 1 முஸ்லீம் பெண் உட்பட 10 பெண் வேட்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இது முந்தைய சட்டமன்றத்தின் ஒன்பது என்ற எண்ணிக்கையை தாண்டிவிட்டது. 1989க்குப் பிறகு இதுவே அதிகபட்ச பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கை யாகும்.

இம்முறை வெற்றி பெற்ற பெண்களில் காங்கிரஸ், பாஜகவிலிருந்து தலா 4 பேரும், ஒருவர் மதச்சார்பற்ற ஜனதாதளத்திலிருந்தும், மற்றுமொருவர் சுயேட்சையாக வெற்றி பெற்றவரும் ஆவர். இந்தத் தேர்தலில் மொத்தம் போட்டியிட்ட 2613 வேட்பாளர்களில் 185 பேர் பெண்கள் ஆவர். பாஜக 12 பெண் வேட்பாளர் களையும் காங்கிரஸ் 11 பெண் வேட்பாளர் களையும் நிறுத்தியிருந்தனர்.

**சிறுபான்மை வேட்பாளர்கள்:** சட்டசபையில் முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த 9 சட்டமன்ற உறுப்பினரும், 1 கிறிஸ்தவ சட்டமன்ற உறுப்பினரும் இடம் பெறுகிறார்கள்.

காங்கிரஸ் 15 முஸ்லிம் வேட்பாளர்களுக்கு இடங்களை வழங்கியது. அவர்களில் 9 பேர் வெற்றி பெற்றனர். மதச்சார்பற்ற ஜனதாதள ம் 23 முஸ்லீம் வேட்பாளர்களை நிறுத்தியது. ஆனால் யாராலும் வெற்றி பெற முடியவில்லை.

காங்கிரசால் நிறுத்தப்பட்ட ஒரே முஸ்லிம் பெண் வேட்பாளரான கனீஸ் பாத்திமா, குல்பர்கா வடக்கு தொகுதியில் வெற்றி பெற்றார்.

கர்நாடக சட்டமன்றத்தில் 2008 இல் 9 முஸ்லிம்கள் இருந்தனர். அது 2013 இல் காங்கிரசிலிருந்து ஒன்பது பேரும் மதச்சார்பற்ற ஜனதாதளத்திலிருந்து இரண்டு பேரும் என 11 ஆக உயர்ந்தது. 1978ல்தான் அதிக எண்ணிக்கையில் 16 முஸ்லிம் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அதே சமயம் 1983ல் ராமகிருஷ்ண ஹெக்டே முதல்வர் பதவியில் இருந்தபோது மிகக் குறைவான அளவுக்கு இருவர் மட்டுமே இருந்தனர்.

**கவனிக்கப்பட வேண்டிய முக்கிய அம்சங்கள்:**

**வர்க்கம் ஒரு முக்கிய அம்சம்:** அது பெற்ற இடங்கள், வாக்குகளின் பங்கு என்ற அடிப்படையில், காங்கிரஸ் பெற்றுள்ள வெற்றியின் அளவுப்படி பார்த்தால் அதன் பாரம்பரிய வாக்காளர்கள் மட்டும் அதற்கு வாக்களித்திருக்கவில்லை; மற்ற சாதிகளைச் சேர்ந்த ஏழை வாக்காளர்களும் இந்தத் தேர்தல்களில் அக்கட்சிக்கு ஆதரவளித்துள்ளனர் என்பதையே காட்டுகிறது. மூன்று பெரிய கட்சிகளின் தேர்தல் வாய்ப்புகளை தீர்மானிப்பதில் சாதி ஒரு முக்கிய காரணியாக உள்ளது. இருப்பினும், இந்தத் தேர்தல்கள் காட்டியுள்ளபடி, அது மட்டுமே வரையறுக்கும் காரணி அல்ல. பாரம்பரியமாக, உயர் சாதியினர் மற்றும் லிங்காயத்துகளின் ஆதரவை பாஜக பெற்றுள்ளது. அதே சமயம் அகிண்டா (சிறுபான்மையினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், தலித்துகள்) எனப்படும் பல்வகை சாதிகளின் ஆதரவு காங்கிரசுக்குப் பின்னால் உள்ளது. மேலும் மதச்சார்பற்ற ஜனதாதளத்திற்கு வொக்கலிகர்களின் ஆதரவு உள்ளது. இருந்தபோதிலும், இந்தியா டுடேஆக்சிஸ் மை இந்தியா மற்றும் ஈடினா, கர்நாடகாவில் உள்ள மாற்று ஊடகக் குழு ஆகியவற்றின் தேர்தலுக்குப் பிந்தைய இரண்டு கருத்துக் கணிப்புகளும் வாக்காளர்கள் முடிவெடுப்பதில் பொருளாதாரக் காரணிகள் முக்கிய செல்வாக்கு செலுத்தின என்பதை உறுதிப்படுத்துகின்றன. லோக்நிதிசிஎஸ்டிஎஸ்சின் தேர்தலுக்குப் பிந்தைய கருத்துக்கணிப்புத் தரவுகள், மாநிலத்தில் வாக்காளர்களுக்கு மிகப் பெரிய தேர்தல் பிரச்சினையாக வேலையின்மை இருப்பதாகவும், அதனைத் தொடர்ந்து வறுமையும் விலைவாசி உயர்வும் இருப்பதாகவும் தெரிவிக்கின்றன. பாரம்பரியமான சாதிய எல்லைகளைத் தாண்டி ஒரு வர்க்கக் கூட்டணி உருவானது என்பது கர்நாடக சட்டமன்றத் தேர்தலில் ஒரு தனித்துவமான காரணியாகும். இதனால், மக்கள் எதிர்கொள்ளும் கடுமையான பொருளாதார நெருக்கடியைப் புறக்கணித்து, சாதியை வகுப்புவாதமாக்க பாஜக செய்த முயற்சிகள் பலனளிக்கவில்லை.

**இந்துத்வாவுக்கு பின்னடைவு:** பாஜக இந்த தேர்தலில், தனது ஆட்சிக்கு எதிரான மக்களின் மனநிலையை அறிந்தே இருந்தது. இதனை இந்துத்துவா மற்றும் மோடியின் விளம்பர உத்திகளின் மூலம் எதிர்கொள்ள முயன்றது. இவற்றை பயன்படுத்தி சாதியக் கணக்கீடுகள் மற்றும் கூட்டணிகளை முறியடிக்கவும் முயற்சித்தது. இதற்காக, எடியூரப்பா உள்ளிட்ட பல வலுவான லிங்காயத் தலைவர்களை பாஜக ஒதுக்கி வைத்துவிட்டு, ஆர்எஸ்எஸ் தொழுவத்தில் இருந்து 75 புதிய போட்டியாளர்களுக்கு வாய்ப்பை வழங்கியது. கர்நாடகாவில் ஒரே சிவில் சட்டத்தை அமல்படுத்துவதற்கும், தேசிய குடிமக்கள் பதிவேட்டை (என்ஆர்சி) அறிமுகப்படுத்துவதற்கும், மத அடிப்படை வாதத்தை விசாரிக்க சிறப்பு காவல் பிரிவை அமைப்பதற்கும் பாஜக தனது தேர்தல் அறிக்கையில் உறுதியளித்தது. "யுகாதி", "கணேஷ் சதுர்த்தி", "தீபாவளி" ஆகிய விழாவின் மாதங்களில் தலா ஒன்று என அனைத்து வறுமை கோட்டுக்கு கீழேயுள்ள குடும்பங்களுக்கும் மூன்று இலவச சமையல் எரிவாயு உருளைகள் வழங்கப்படும் என்ற வாக்குறுதியையும் வழங்கியது. மறுபுறம், வகுப்புவாத அரசியலுக்கு எதிராக காங்கிரஸ் தாக்குதல் நடத்தியது; அதன் தேர்தல் அறிக்கை "சர்வ ஜனங்கத சாந்திய தோட்டா" அதாவது. "அனைத்து சமூகங்களின் அமைதியான தோட்டம்" எனத் தலைப்பிடப்பட்டது. சட்டத்தை மீறுகின்ற, மத வெறுப்பை விதைக்கின்ற, மதவெறியை, வகுப்புவாத வன்முறையை பரப்புகின்ற எந்தவொரு அமைப்புக்கும் எதிராக நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தது. மேலும் பஜ்ரங் தள் என குறிப்பிட்டுச் சொன்னது.

தேர்தல் அறிக்கை வெளியானதும், இது தொடர்பாக ஊடகங்களில் பரபரப்பு ஏற்பட்டது. மோடி உட்பட, பாஜக தலைவர்கள் ஒவ்வொரு பேரணியிலும் அனுமனின் பெயரைக் கூறினர். மே 9 ஆம் தேதி அனுமன் வேண்டுதலை பாடுவதற்கு அழைப்பு விடுக்கப்பட்டது. மேலும் பஜ்ரங் தளத்தை அனுமனுடன் சமப்படுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இவை

அனைத்தும் தோல்வியடைந்தன. பஜ்ரங் தளத்தை தடை செய்வது குறித்த முடிவின் அறிவாண்மை குறித்து அதை தேர்தல் அறிக்கையில் சேர்த்ததில் சதி இருப்பதாகக் கூறியும் பலர் கேள்வி எழுப்பிய போதிலும், காங்கிரஸ் தனது முடிவில் உறுதியாக நின்றது. சமூகப் பொறியியலின் மூலம் சாதிய கணக்கீடுகளை மறுவடிவமைக்கும் முயற்சிகளும் கூட, இந்துத்துவா மற்றும் மோடியின் விளம்பர உத்திகளைப் போலவே பலனளிக்கவில்லை. "இரட்டை என்ஜின்" அரசாங்கம், குறிப்பாக மாநிலத்தை சார்ந்த பிரச்சனைகள் இல்லாமை, மோடி, யோகி போன்றோரிடம் மாநிலத்தை ஒப்படைத்தது ஆகியவை மாநிலத்தின் பெருமையையும் விருப்பங்களையும் புண்படுத்தியது. பாஜக தனது குஜராத்/உ.பி./அஸ்ஸாம் மாதிரியை கண்மூடித்தனமாக செயல்படுத்துவது, அதாவது சாதியக் கூட்டணிகளையும் ஆட்சிக்கு எதிரான மக்களின் மனநிலையையும் எதிர்கொள்ள இந்துத்வா நம்பியது தவறு என நிரூபிக்கப் பட்டது. இந்தத் தேர்தல் இந்துத்துவா அல்லது வெறுப்பு அரசியல் மீதான வாக்கெடுப்பா? ஒருவேளை இல்லாமல் இருக்கலாம். ஆனால் அது நிச்சயமாக இந்துத்துவா நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்பட்ட பின்னடைவாகும். வகுப்புவாத துருவசேர்க்கை நிகழ பல பத்தாண்டுகளாக அது கடினமாக உழைத்துள்ள கர்நாடகாவின் கடலோரப் பகுதியில், பாஜகவின் வாக்குகளின் பங்கு/பெற்ற இடங்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது. குறிப்பிடத்தக்க வகையில், இந்துத்துவ முத்திரை பதித்த அரசியலின் இரண்டு முக்கிய முகங்கள் இந்தத் தேர்தலில் தோல்வியடைந்தனர். பாபா புத்தங்கிரியை இந்துக் கோவிலாக அறிவிக்க வேண்டும் என்று கோரி பரப்புரையின் முன்னணியில் செயல்பட்ட பாஜக தேசிய செயலாளர் சிடி.ரவி, சிக்மகளூரில் தோல்வியுற்றார். ஹிஜாப் தடையை அமல் படுத்துவதில் முக்கிய பங்கு வகித்த ஆரம்பநிலை, நடுநிலைக் கல்வி அமைச்சர் பிசி. நாகேஷ், திப்டூர் தேர்தலில் தோல்வியடைந்தார்.

மோடி என்ற பிராண்ட் வெல்லப்பட முடியாதது என்ற மாயை, தேய்ந்து விட்டது: பாஜகவின் மிகவும் நம்பகமான தேர்தல் பரப்புரையாளர், அவர் வெல்லப்பட முடியாதவர் என ஒரு மாயை உணர்வுபூர்வமாக வளர்க்கப் பட்டு மோடியைச் சுற்றி அதிக பரபரப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இந்தத் தேர்தலில் பாஜக பரப்புரையின் மையப் புள்ளியாக மோடியை பாஜக நிறுத்தியது. பேரணிகள் முதல் சாலைவழி பரப்புரை வரை தேர்தல் பிரச்சாரத்தின் ஒவ்வொரு அம்சமும் மோடியை முன்னிறுத்து வதாகவே இருந்தது. மோடி நிச்சயமாக, தன்னை முன்னிறுத்த இதையெல்லாம் செய்துகொண்டார். 91 முறை அவமானப்படுத்தப்பட்டதாக குற்றம் சாட்டி, தான் பாதிக்கப்பட்டவர் எனக்காட்ட பெருமுயற்சி செய்தார். இதை காங்கிரஸ் பலவீனமான "அழுகாச்சி பிரதமர்" என்று நையாண்டி செய்தது. பெங்களூருவில் மோடியின் இரண்டு நாள் சாலைவழி பரப்புரை, அதன் ஒவ்வொரு மீட்டருக்கும் நேரடி ஊடக ஒளிபரப்பின் மூலம் தேர்தல்களை பாஜகவிற்கு ஆதரவாக மாற்றுவதற்கான சிறந்த திட்டம் என பார்க்கப்பட்டது. இருப்பினும், இந்த சூதாட்டமும் தோல்வியடைந்தது. மேலும் மோடியின் ஆழ்ந்த தனிப்பட்ட ஈடுபாடு கூட பாஜகவின் தலைவிதியை மாற்றமுடியவில்லை. இரண்டு குறிகாட்டிகள் அதன் மோசமான தோல்வியை சுட்டிக்காட்டுகின்றன. முதலாவதாக, பெங்களூருவில் வாக்குப்பதிவு குறைவாக இருந்தது. இரண்டாவதாக, வெற்றி பெற்ற இடங்களின் எண்ணிக்கையிலோ வாக்குகளின் பங்கிலோ பெரிய முன்னேற்றம் எதுவும் இல்லை. உண்மையில், பெங்களூரு பகுதியில் பாஜகவின் வாக்கு சதவீதம் 5% அதிகரித்திருந்தாலும், காங்கிரசும் அதன் வாக்கு சதவீதத்தை 1% அதிகரித்தது. பாஜக பெற்ற இடங்கள் 11ல் இருந்து 15 ஆக அதிகரித்தது (2022 இல் பாஜகவிற்கு கட்சி மாறியவர்கள் உட்பட), இருப்பினும், பாஜக கோவிந்தராஜநகர் தொகுதியை காங்கிரசிடம் இழந்தது. ஜெயநகர் தொகுதியை கைப்பற்ற தீவிர முறைகேட்டில் ஈடுபட்டது. ஆக இந்தத் தேர்தலில் வெளிப்பட்ட செய்தி தெளிவாக உள்ளது தேர்தலில் வெற்றி பெற மோடி மட்டும் போதாது!

**சிவில் சமூகத்தின் பங்கு:** தேர்தல் முடிவைப் பாதிக்கும் கட்டாய முன்னேற்றங்களில் ஒன்று சிவில் சமூக அமைப்புகளின், குறிப்பாக, "பகுத்வா கர்நாடகா" மற்றும் "எட்டேலு கர்நாடகா" ஆகியவற்றின் பங்காகும். ஒருவேளை அதன் வரலாற்றில் முதல்முறையாக, இந்தத் தேர்தலில் தான் பிரிவினைவாத, மதவெறி, மக்கள் விரோத பாஜகவை நிராகரிக்குமாறு மக்களை வேண்டிக் கொண்ட, கட்சி சார்பற்ற அமைப்புகளின் செயல்பாடுகளை கர்நாடகா சந்தித்துள்ளது.

பகுத்வா கர்நாடகா (பன்மைத்துவ கர்நாடகா), எனப்படும் வகுப்புவாத நல்லிணக்கத்

திற்காகப் போராடும் 2 வருட கால பரந்த கூட்டணி, பிஜேபி அரசாங்கத்தின் மோசமான தோல்விகளை அம்பலப்படுத்தும் துறை வாரியான தகவல் அறிக்கைகளை வெளியிட்டது. வாக்காளர்களுக்கு தகவல்களை வெளியிடும் இன்ஸ்டாகிராம் பதிவுகள், துண்டு பிரசுரங்கள், இணையதளங்களில் இந்த தகவல் அறிக்கைகள் மற்ற சிவில் சமூக குழுக்களால் பயன்படுத்தப்பட்டன.

தேர்தல் அறிவிக்கப்பட்டவுடன், தேவனூர் மகாதேவா, ரஹ்மத் தரிகெரே, டு சரஸ்வதி மற்றும் பலர் உள்ளிட்ட அறிவுஜீவிகளின் தலைமையில், மாநிலம் முழுவதிலும் இருந்து ஏராளமான முற்போக்கு சிந்தனையாளர்கள், இலக்கியவாதிகள், சிவில் சமூக ஆர்வலர்கள், சிவில் சமூகக் குழுக்களால் உருவாக்கப்பட்ட "எட்டேலு கர்நாடகா" (விழித்தெழு கர்நாடகா) என்பது இன்னுமொரு முக்கியமான முன்முயற்சியாகும். பாஜகவின் தேர்தல் தோல்வியை உறுதிசெய்யும் ஆர்வத்தில் கட்சி சார்பற்ற சக்திகளால் இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது. மற்ற தலையீடுகளில், எட்டேலு கர்நாடகா பாஜக அரசாங்கத்தின் தோல்விகளைப் பற்றி மக்களுக்குத் தெரிவிக்க மாநிலம் முழுவதும் வாக்காளர் சேர்க்கை இயக்கங்கள், கருத்தரங்குகள், பத்திரிகையாளர் சந்திப்புகளை நடத்தியது. மேலும் சமூக ஊடகங்களில் பகிர்வதற்கு சுவரொட்டிகளையும் காணொளிகளையும் ஒவ்வொரு நாளும் வெளியிடப்பட்டது. பாஜக அரசின் தவறான ஆட்சியையும் அட்டூழியங்களையும் விளக்கும் துண்டுப் பிரசுரங்கள் அச்சிடப்பட்டு லட்சக்கணக்கில் விநியோகிக்கப்பட்டன.

குடிசைவாசிகளின் உரிமைக்காகப் போராடும் ‘ஸ்லம் ஜனந்தோலனா கர்நாடகா’, விவசாயிகள், தலித்துகள், தொழிலாளர் அமைப்புகளின் கூட்டணியான ‘சம்யுக்த ஹொராடா’, ‘வெறுப்பு பேச்சுக்கு எதிரான பரப்புரை’ஆகியவை இந்த நேரத்தில் செயல்பாட்டில் இருந்த பிற சிவில் சமூக அமைப்புகளாகும். இவை பாஜகவின் மக்கள் விரோதக் கொள்கைகளுக்கு எதிராக பொதுக்கருத்தை உருவாக்க பெரும் பங்காற்றின.

தலித் அமைப்புகளிடமிருந்து வந்ததே, மிகப்பெரிய முயற்சியாக இருக்கலாம். பல பிரிவுகளாகப் பிரிந்து கிடந்து, பல ஆண்டுகளுக்குப் பிறகு, இந்தக் குழுவினர் ஒன்றிணைந்து, 2022 டிசம்பர் 6ஆம் தேதி ஒரு மாபெரும் மாநாட்டை நடத்தினர். இதில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். வகுப்புவாத சக்திகளை, பாஜகவை ஒட்டு மொத்தமாக எதிர்க்க வேண்டும் என்று அவர்கள் அழைப்பு விடுத்தனர். இது தலித் வாக்காளர்கள் மத்தியில் பாஜக நுழையும் போக்கை மாற்றியமைக்கவும், தலித் வாக்குகளை காங்கிரசுக்குப் பின்னால் ஒருங்கிணைக்கவும் கருவியாக இருந்தது.

**இந்தியத் தேர்தல் ஆணையம்:** இந்தியத் தேர்தல் ஆணையம் தற்போது அறியப்படும் அதன் பண்புக்கேற்ப பாகுபாடான முறையில் செயல்பட்டது. மோடியும் பாஜகவும் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தையும் மாதிரி நடத்தை விதிகளையும் அப்பட்டமாக மீறியதற்கு எதிராக எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. வெறுப்புப் பேச்சுக்களும் மத அடிப்படையிலான வாக்குகளுக்கான அழைப்புகளும் கண்மூடி கண்டுகொள்ளாமல் விடப்பட்டன. மேலும் மோடியின் இரண்டு நாள் நிகழ்ச்சியானது மீறல்களும் சட்டத்திற்கு புறம்பானவையும் மிகுந்ததாக நடத்தப்பட்டன.

**இடதுசாரிக் கட்சிகளின் செயல்பாடு:** புரிந்துணர்வை எட்டுவதற்கான முயற்சிகள் இருந்த போதிலும், இடதுசாரிக் கட்சிகளுக்கிடையே ஒருமித்த கருத்து ஏற்படாததால், இகக(மா), இகக, எஸ்யுசிஐ, இகக(மாலெ) ஆகியவை சில தொகுதிகளுக்கு வேட்பாளர்களை அறிவித்தன. அவற்றில் சில இடங்களில் "நட்புப் போட்டிகள்" இருந்தன. இகக(மா) போட்டியிட்ட கேஆர்புரத்தில் மதச் சார்பற்ற ஜனதாதளம் தனது வேட்பாளரை நிறுத்தியபோதிலும், மதச்சார்பற்ற ஜனதாதளத்துடன் இகக(மா) ஒரு "புரிதல்" ஏற்படுத்திக் கொண்டது. பரப்புரை சூடு பிடித்த நிலையில், பெங்களூருவில் உள்ள கேபிசிசி அலுவலகத்தில் காங்கிரஸ் தலைவர்களுடன் இணைந்து இகக, செய்தியாளர் சந்திப்பு நடத்தி, இகக(மா) போட்டியிடும் பாகேபல்லி, சர்வோதயா கர்நாடக வேட்பாளர் போட்டியிடும் மெலுகேட், இகக போட்டியிடும் 7 தொகுதிகள் ஆகியவற்றைத் தவிர மற்ற அனைத்து இடங்களிலும் காங்கிரசுக்கு ஆதரவளிப்பதாக அறிவித்தது. இகக(மாலெ) இரண்டு இடங்களில் போட்டியிட்டது. கேஆர்புரத்தில் தோழர் பி.பி.அப்பண்ணாவும் கனககிரியில் தோழர் கெஞ்சப்பாவும் போட்டிட்டனர். மீதமுள்ள இடங்களில் அது இடது, மதச்சார்பற்ற, ஜனநாயக கட்சிகளை ஆதரித்தது. மொத்தத்தில் இடதுசாரிக்

கட்சிகளின் செயல்பாடுகள் பெரிய அளவில் இல்லை. இகக(மாலெ) கே.ஆர்.புரத்தில் 227 வாக்குகளும் கனககிரியில் 747 வாக்குகளும் பெற்றது.

**முன்னோக்கிச் செல்வது:** கர்நாடகாவில் பாஜகவிற்கு ஏற்பட்டுள்ள தீர்மானகரமான தோல்வி மற்ற மாநிலங்களில் பாஜக ஆட்சியை இழக்கும் போக்கிற்கு வலிமை சேர்க்கிறது. கர்நாடகா தனது பிடியில் இருந்து விலகி விட்ட நிலையில், தென்னிந்தியாவில் எந்த மாநிலத்திலும் பாஜக ஆட்சியில் இல்லாததால் வட இந்தியக் கட்சி என்ற அதன் அடையாளம் உறுதிப் படுத்தப்பட்டுவிட்டது. 2024ன் நாடாளுமன்றத் தேர்தலில் இந்தத் தீர்ப்பு ஏற்படுத்தும் தாக்கங்களே இதன் முக்கியத்துவமாகும். பாஜகவிற்கு வெற்றி கிடைத்திருந்தால் அதன் முரட்டுத்தனம் பலமடைந்து இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. அதே சமயம் எதிர் கட்சிகளின் நம்பிக்கையை தளரச் செய்திருக்கும். தென்னிந்தியாவில் பாஜக ஆட்சியில் இருந்த ஒரே மாநிலம் 'தெற்கின் நுழைவாயில்' எனப்பட்ட கர்நாடகா மட்டுமே. அதன் கதவுகள் அடைக்கப்பட்டுவிட்ட நிலையில், 2024ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னதாக, ராஜஸ்தான், மத்தியப்பிரதேசம், சத்தீஸ்கர், தெலுங்கானா ஆகிய மாநிலங்களில் நடைபெறவிருக்கும் சட்டமன்றத்தேர்தல்களுக்கு இப்போது தேர்தல் போராட்டம் நகர்ந்துவிட்டது. பாஜகவுக்கு எதிரான இந்தத் தேர்தல் போராட்டங்கள் சங்க படையணியின் கார்ப்பரேட் மதவெறி பாசிசத்தை உறுதியாக நிராகரிப்பதை உறுதி செய்வதற்கான நீண்ட, நெடிய போராட்டத்தின் ஒரு அங்கமாகும்.

**லிபரேஷன், ஜூன் 2023**

**தமிழாக்கம் – செந்தில்**

உரையாடல்

# எப்போ என் கனவு நனவாகும்? ஒரு தூய்மைப்பணியாளரின் கேள்வி!

கோவை மாநகராட்சியில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர் லட்சுமி மற்றும் தோழர்கள் வெங்கடாசலம், நாராயணன் உரையாடலில் இருந்து...



கேள்வி: வணக்கம். உங்களப் பத்தி, வாழ்க்கை, வேலை, பிரச்சனைகள் பற்றி கொஞ்சம் சொல்லுங்களேன்.

பதில்: வணக்கங்க, ஏன்னோட பேரு லட்சுமி. நான் கோவை கார்ப்பரேசன்ல பத்து வருசமா தூய்மைப் பணியாளரா வேலை செய்கிறேன். தற்போது சரவணம் பட்டி 10வது வார்டுல வேலை செய்யுறேன். நான் வேலைக்கு சேர்ந்தப்ப ஒரு நாளைக்கு 120 ரூபாய் சம்பளமா கொடுத்தாங்க. கையில் பணமா கொடுப்பாங்க. சரியான நேரத்திலயும் முழுசாவும் கிடைக்காது. போராட்டத்துக்கு அப்புறமாதான் ஈ.எஸ்.அய், பி.எப். புடுச்சாங்க. சம்பளத்தை பேங்க் அக்கவுண்ட் ஓப்பன் பண்ணி பேங்க் மூலமா கொடுக்கிறாங்க. ஈ.எஸ்.அய் பேருக்கு மட்டுமே இருக்கு. அதுல நானு இதுவரைக்கும் வைத்தியம் பாத்துக்கிட்டதுல்ல. பி.எப். புடிச்சாலும் பணம் எடுக்க முடியல. அதுல நெறைய பிரச்சனை இருக்கு. லாக் பண்ணி வச்சதாகவும் சொல்லுறாங்க. இவ்வளவு வருசமா வேலை செஞ்சும் இன்னைக்கு பிடித்தம் போக ஒரு நாளைக்கு ரூ.412 மட்டும்தான் கொடுக்கறாங்க. வாரத்தில் எல்லா நாட்களும் வேலை வாங்குவாங்க, போன வருசம் நடந்த

போராட்டத்துக்கு பின்னாடி தான் ஒரு நாளு லீவு கிடைச்சது. எனக்கு 3 பெண் பிள்ளைங்க, ஒரு பையன். என்னோடகணவர் 3 வருசத்துக்கு முன்னாடி இறந்துட்டாங்க. அவருக்கு உடம்பு சரியில்லாத காலம் பூராவும் குடும்ப வருமானம் போதல. அவரது மருத்துவச் செலவுக்கு கடன் வாங்கித்தான் சாகற வரைக்கும் செலவு செஞ்சோம். எனது மூணு பெண் பிள்ளைங்களும் பள்ளி படிப்பு வரைதான் படிக்க முடிஞ்சது. எனது மகனை வக்கீல் படிக்க வைச்சேன். நான் அதிகாலைல வேலைக்கு செல்வதால் என் பிள்ளைகள் பள்ளிக்கு செல்லும் போது வீட்டில இருந்து அனுப்பனதே இல்லை. சொந்த வீடு இல்லை. வாடகை வீடுதான். சேமிப்பு என்று எதுவும் இல்லை. எனது மகள்களின் திருமண செலவுக்கு சுய உதவிக்குழு கடன், கந்துவட்டிக்கு கடன்வாங்கி தான் திருமணம் முடிச்சேன். இந்த கடன்களை எல்லாம் மாதா மாதம் கட்டிக் கொண்டே இருக்கிறேன்.

வேலைக்கு காலைல போகும் போது ஷேர் ஆட்டோவிலதான் போவேன். வார்டுல கையெழுத்து போட்டுட்டு பஸ் ஏறிதான் வேலை செய்யும் எடத்துக்குப் வோவேன். காலைல டீ பிஸ்கட் சாப்பிட்டுட்டுதான் வேலையை ஆரம்பிப்பேன். காலை உணவு கையில காசு இருந்தா கடையிலே சாப்பிடுவேன். காசு இல்லன்னா பட்டினிதான். வேலைக்குப் போகிற இடங்களுக்கு சாப்பாடோ தண்ணியோ எடுத்துட்டுப் போகமுடியாது. வேலைப் பகுதியில உள்ள வீட்டிலதான் பழைய பாட்டில்ல தண்ணி தருவாங்க. அது காலியாயிடுச்சின்னா வீடுகள்லதான் தண்ணி கேட்போம். வீட்டுக்காரர்கள் பாட்டில தொடாமதான் தண்ணி தூக்கி ஏத்துவாங்க. குப்பைகள சில பேருதான் பிரிச்சுத் தருவாங்க. பல பேரு பிரிக்காமதான் தருவாங்க. அதையெல்லாம் வெறும் கையிலதான் நானே பிரிக்கனும். பாதுகாப்புக்கு எதுவும் கிடையாது. கையுறை கூட இரண்டுக்கு ஒன்னு அல்லது பெரிய அதிகாரிகள் வரும் போது போட்டோவுக்காக ஒன்னு தருவாங்க.

எனக்கு தெருக்களை கூட்டுறது அல்லது தள்ளுவண்டியில போய் குப்பைகளை சேகரிப்பது அல்லது சாலைகளின் ஓரத்தில் உள்ள குப்பை மண்களை பெருக்குவது, சாலையின் நடுவே உள்ள டிவைடர் ஓரத்திலுள்ள மண்ணைக் கூட்டி அள்ளுவது அல்லது லாரிகளில் குப்பை களை ஏத்துற வேலைகளை கொடுப்பாங்க.

டிவைடர் மண் சுத்தம் செய்யும்போது விபத்து ஏற்படுமோ என்ற பயத்தோடதான் வேலை பாக்கணும். அப்படி விபத்தும் ஏற்பட்டிருக்கு. வேலைப்பார்க்கிற இடத்தில பொதுக் கழிப்பிடங்கள் இல்லையென்றால் மிகவும் வேதனைதான்.

இளம்பிள்ளைங்க மாதிரி தூங்கி எழுந்து உடனே நான் வேலைக்குபோகமுடியாது. விடியறதுக்கு முன்னாடியே (4 மணி) எழுந்து குளிச்சி முடிச்சி வீடு வாசல் சுத்தம் செஞ்சி சமைக்க வேணும். அப்புறமாதான் வேலைக்கு போகனும். இதுக்குமுன்னாடியெல்லாம். 5.45 மணிக்கு அட்டன்டன்ஸ் இருந்துச்சு. இப்போ போராடியதுக்கு பின்புதான் ஏழு மணிக்கு அட்டன்டன்ஸ் ஆரம்பிக்குது.

காலைல வேலைக்குச் சென்று வேலை முடிந்து வீடு திரும்ப பயண செலவு, டீ. உணவு என நாள் ஒன்றுக்கு ரூ.150 வரைக்கும் செலவிட வேண்டி உள்ளது. சம்பளத்தைத் தவிர வேறு எந்த உதவித் தொகையும் கொடுப்பது கிடையாது.

வேலை முடியறதுக்கு வேலையை பொருத்து மதியம் 2 மணிக்கு மேலேயும் ஆயிடும். வீட்டுக்கு வர 4 மணிக்குமேலேயும் ஆயிடும். வீட்டுக்கு வந்ததும் துணிகளை துவைத்து பாத்திரம் தேய்த்து சமைச்சி படுக்கப் போகும் வரை வீட்டு வேலைகள் இருந்துகொண்டே இருக்கும். பொதுவா 5 மணி நேரம்தான் தூக்கம் நான் வேலைக்கு சேர்ந்தப்ப நிரந்தரம் செய்வாங்கன்னு எதிர்பார்த்து சேர்ந்தேன். முன்னாடி இருந்த அதிமுக ஆட்சியும் நிரந்தரம் செய்யல. இப்ப இருக்கும் திமுக ஆட்சியும் நிரந்தரம் செய்யல. நானும் மத்த மக்களைப் போல நல்ல சம்பளத்துல கவுரவமா வாழணும்தான் நினைக்கிறேன். வாங்குற காசில அதெல்லாம் எட்டாத கனவுதான். போராடுனா நிரந்தரம் கெடைக்கும் என்கிறாங்க. எப்போ நடக்கும் போராட்டம், எப்ப நிரந்தரம் கிடைக் கும்னும் தெரியல. எல்லாம் கனவுகளாகவே இருக்கிறது.

நாங்கள் அதற்காகத்தான் தொழிலாளர்களை சங்கமாக்கமுயற்சிக்கிறோம். சங்கமாக்கி போராடினால் எல்லா கனவுகளும் நனவாகும்.

தூய்மைபணியாளர் லட்சுமி: நன்றிங்க. இன்னைக்கு ஞாயிறு லீவு நாள். அதனாலதான் இந்த நேரம் கூட உங்ககூட பேச முடிஞ்சது. இன்னும் நிறைய இருக்கு. மாசாமாசம் பொம்பளங்க நாங்க படுற அவஸ்வத. மழை வெயிலுன்னு நிறைய இருக்கு பேசறக்கு. ❑

# தமிழகத்திற்கான தனித்துவமான கல்விக்கொள்கையை நோக்கிய இரண்டு பாதைகள்



*அ*திமுக-பாஜக பிற்போக்குக் கூட்டணியை வென்று, தி.மு.க. ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு, 2021–22ஆம் ஆண்டிற்கான இடைக்கால பட்ஜெட்டைத் தாக்கல் செய்யும்போது, 'மாநிலத்திற்கென புதிய கல்விக் கொள்கையை உருவாக்க ஒரு குழு அமைக்கப்படும், தமிழ்நாட்டின் வரலாற்று மரபு, தற்போதைய நிலைமை, எதிர்காலக் குறிக்கோள்களுக்கு ஏற்ப, மாநிலத்திற்கென தனித்துவமான மாநிலக் கல்விக் கொள்கை ஒன்றை வகுப்பதற்கு, கல்வியாளர்கள் மற்றும் வல்லுநர்களைக் கொண்ட உயர் மட்டக் குழு ஒன்றை இந்த அரசு நியமிக்கும்' என அறிவிக்கப்பட்டது. 2022 ஜூன் 1 அன்று தமிழக அரசு அரசாணை எண் 98யை வெளியிட்டது. தனித்துவமான கல்விக்கொள்கையை உருவாக்கு வதற்கான உயர்நிலை குழு ஒன்றை அந்த அரசாணை அமைத்தது. அவ்வாறு அமைக்கப் பட்ட புதிய கல்விக் கொள்கை வரைவுக் குழு வின் உறுப்பினர் ஒருங்கிணைப் பாளர் பொறுப் பில் பேரா. ஜவஹர் நேசன் செயல்பட்டார்.

பேரா. ஜவஹர் நேசன் கடந்த 10 மே அன்று தனது பொறுப்பிலிருந்து விலகினார். தமிழ்நாட்டுக்கானத் தனித்துவமிக்க கல்விக் கொள்கையை உருவாக்குவதற்கு உருவாக்கப் பட்ட கமிட்டியில் அதிகார வர்க்கத்தின் (முதல்வரின் தனிச் செயலாளராக இருந்த உதயச்சந்திரன்) தலையீடு இருக்கிறது என்றும், தமிழ்நாட்டின் கல்விக்கொள்கையில் மத்திய அரசின் புதிய கல்விக்கொள்கை (2020)ன் அம்சங்கள் சில இருப்பதை உறுதி செய்ய வேண்டும் என்று நிர்ப்பந்தம் செய்யப்பட்டதாக வும் அதற்காக ஒருமையில் அழைத்து மிரட்டப் பட்டதாகவும் பேரா. ஜவஹர் நேசன் குற்றம் சொன்னார். குற்றச்சாட்டுக்கு ஆளான உதயச் சந்திரன் மே 13 அன்று, வழக்கம்போலான சரிக்கட்டுதல் ஒன்றில், வேறு பொறுப்புக்கு மாற்றப்பட்டார். மேற்படி கூற்றை உதறித் தள்ளிய தமிழ் நாடு மாநில அரசு, கமிட்டியைச் சற்று மாற்றியமைத்துவிட்டு, விரைவில் கல்விக் கொள்கை வெளியிடப்படும் என்று சொன்னது. குற்றச்சாட்டுகள் குறித்து எந்த பதிலும் இல்லை. முதலமைச்சர் ஸ்டாலினிடம் புகார் அளித்திருந்த தாகச் சொன்ன ஜவஹரின் அறிக்கைக்கு பதில் சொல்லப்படவும் இல்லை.

ஜவஹர் நேசன் பல நாடுகளில் பணியாற்றிய கல்வியாளர். சவீதா பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். சிறந்த கல்வியாளர், கல்வி குறித்த ஆய்வாளர் என்று பெயர் பெற்றவர். உலகில் இதுவரை வெளிவந்த கல்விக்கொள்கைகளிலேயே மிகவும் பிற்போக் கானது என்று உறுதியாகக் கூறினார். அந்த உறுதியின் காரணமாகவோ அல்லது வேறு எந்த காரணத்தினாலோ ஜவஹர் நேசன் தமிழக அரசின் தனித்துவமிக்க கல்விக்கொள்கையை

வரைவதற்கான கமிட்டியின் ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்பட்டார்.

அவ்வாறு நியமிக்கப்பட்ட பேரா. ஜவஹர் நேசன், தான் கடும் நெருக்கடியை எதிர்கொண்டதாகவும், அதனால் வெளியேறியதாகவும் சொல்கிறார். "உலகம் முழுவதிலுமிருந்து 113 சிறந்த கல்வியாளர்களைத் தேர்வு செய்து அவர்களுடன் விவாதித்து வரைவுக் கொள்கை உருவாக்கப்பட்டு குழுத் தலைவருக்கு சமர்ப்பிக்கப்பட்டது. முதல்வரின் தனிச்செயலர் (உதயச்சந்திரன்) விரும்பும் வகையில் அவர் சொல்லும், குழுவுக்கு சம்பந்தப்படாத சிலரின் ஆலோசனையை ஏற்று, அறிக்கை தயாரிக்க, அழுத்தம் கொடுக்கப்பட்டது." என்று பேரா. ஜவஹர் நேசன் தன் விலகலுக்கான காரணத்தைச் சொல்கிறார். மேலும், "தமிழக முதல்வருக்கும் தெரியப்படுத்தினேன். விரிவான அறிக்கையோடு புகார் அளித்தேன். எந்த பதிலும் இல்லாத சூழலில் பொறுப்பு விலகினேன்"என்று தன்னிலை விளக்கம் அளித்துள்ளார். ஜவஹர் நேசன்.

**தமிழ்நாடு உயர் கல்வி பாதுகாப்பு இயக்கத்தின் மதுரை கூட்டம்:**

இந்தச் சூழலில் பேரா. ஜவஹர் நேசன் கலந்து கொண்ட கூட்டம் ஒன்று, கடந்த மே 27 அன்று தமிழ்நாடு உயர்கல்விப் பாதுகாப்பு இயக்கம் சார்பில் மதுரையில் 'தமிழ்நாடு புதிய கல்விக் கொள்கை எதிர்கொள்ளும் சவால்கள்' என்ற தலைப்பில் ஏற்பாடு செய்யப்பட்டது. பேராசிரியர் முரளி கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். கூட்டத்தில் பேராசிரியர் மூட்டா விஜயகுமாரும் மதுரை பல்கலையைக் காப்போம் இயக்கத்தைச் சேர்ந்த பேரா. சீனிவாசனும் உரையாற்றினர். பேராசிரியர் ஜவஹர் நேசன் தனது நிலையை விளக்கிய பின்னர், பிரபா. கல்விமணி (மக்கள் கல்வி இயக்கம்) அவர்களும், கி.வெங்கட்ராமன் (தமிழ் தேசிய பேரியக்கம்) அவர்களும், மதுரை அகில இந்திய மாணவர் கழகத்தைச் சேர்ந்த தோழர் அபிதா அவர்களும் ஜவஹர் நேசன் பேசியவை குறித்து கருத்துரை வழங்கினர். கூட்டத்தில் கலந்துகொண்ட பலரும் தங்கள் ஆதரவை முன்வைத்தனர். தமிழக ஆசிரியர் இயக்கங்களில் குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றான பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் (AUT) தலைவர் காந்திராஜன் தமிழகத்திற்குத் தேவையான கல்விக் கொள் கையை உருவாக்குவதற்கான இயக்கத்தில் தாங்கள் உறுதுணையாக இருப்போம் என்றார்.

தமிழக கல்வி எதிர்கொள்ளும் பிரச்சனைகளைப் பற்றிய ஆய்வு அறிக்கை (Problem Statement) முடிந்துவிட்டது என்றும், அந்த அடிப்படையில் தமிழகத்திற்கான தனித்துவம் உள்ள கல்விக் கொள்கை அறிக்கை சில மாதங்களில் எழுதப்பட்டு வெளியிடப்படும் என்றும் ஜவஹர் நேசன் அறிவித்தார். மேலும், பேரா ஜவஹர் நேசன், தமிழக அரசு தனித்துவமிக்க மக்களுக்கான கல்வித் திட்டம் ஒன்றை உருவாக்குவதற்கு எந்த வாய்ப்பும் இல்லை என்றார்.

தமிழகத்திற்குப் பொருத்தமான கல்விக் கொள்கையை உருவாக்குவதற்கு உலகமெங்கும் பரவியுள்ள 113 கல்வியாளர்கள் பங்களிப்பு செய்துள்ளனர் என்ற பேரா. ஜவஹர் நேசன், மிச்சமுள்ள வேலையை நிறைவு செய்யும் வேலையில் மேலும் பலரும் முன்வந்து உழைக்கின்றனர் என்றார். மிக முன்மாதிரியான, மிகவும் மக்கள் சார்புள்ளதாக, மிகச்சரியான அறிவியல் அணுகுமுறை கொண்டதாக, தமிழகத்தின் பிரச்சனைகள் அனைத்துக்கும் தீர்வு தருவதாக தாங்கள் முன்வைக்கப் போகும் தமிழகத்திற்கான தனித்துவமான கல்விக்கொள்கை அமையும் என்று பேரா ஜவஹர் நேசன் உறுதிப்படச்சொன்னார். தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் பல்கலைக்கழக, கல்லூரி பள்ளி ஆசிரியர்கள், கல்வி ஆர்வலர்கள் நிகழ்ச்சிக்குத் திரளாக வந்திருந்தனர். தமிழ்நாடு உயர் கல்வி காப்போம் இயக்கம் ஏற்பாடு செய்திருந்த கூட்டத்திற்கு வந்த கல்வியாளர்களும், மாணவர்களும், கல்விச் செயல்பாட்டாளர்களும், முற்போக்கான, மக்கள் நலனுக்கான, அறிவியல் சிந்தனை/ வாக்கை முறைக்கான, மத, சாதி பிளவுகளை வேரறுக்கும் கல்விக்கான தாகத்தை வெளிப்படுத்தினர்.

மக்கள் தேடும் கல்வியை யதார்த்தமாக்க இன்றைய திமுக அரசின் கல்விக்கொள்கையின் மையமாக இருக்கும் தனியார்மயத்தின் மீது, வணிகக் கல்வியின் மீது தாக்குதல் தொடுத்தாக வேண்டும். அந்தப் பாதையில் தமிழகத்தின் முற்போக்கு மாணவர்களும், ஆசிரியர்களும், கல்விச் சமூகமும் கரம் கோர்த்தாக வேண்டும். முற்போக்கான கல்விக்கொள்கையை உருவாக்கும் உணர்வு கல்விச் சமூகத்தின் மத்தியிலும் முற்போக்கு அறிவாளிகள் மத்தியிலும் வலுவான பேருணர்வாக இருப்பதைக் கூட்டம் காட்டியது.

**– சி. மதிவாணன்**

# ஆதிதிராவிடர், பழங்குடி பள்ளிகளை கல்வித்துறையோடு இணைப்பதை தமிழ்நாடு அரசு நிறுத்தி வைக்க வேண்டும்.

## இகக(மாலெ) வலியுறுத்தல்!

முதலமைச்சர் தலைமையில் நடைபெற்ற மாநில விழிப்புணர்வு, உயர்நிலை கண்காணிப்புக் குழுக்கூட்டங்களில் வந்த வேண்டுகோள்களை அடுத்து ஆதிதிராவிடர்/பழங்குடி, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர், இந்து அறநிலையத்துறை, வனத்துறை பள்ளி, கல்லூரிகளை அரசின் கல்வித்துறையின் கீழ் கொண்டு வருவது என்றும் இவற்றில் பணிபுரியும் ஆசிரியர்கள், ஊழியர்கள் பணி பாதுகாக்கப்படும் என்றும் 202324 நிதிநிலை அறிக்கையில் அப்போதைய நிதியமைச்சர் அறிவித்திருக்கிறார்.

இதை அடுத்து இந்த அறிவிப்பை ஆதரித்தும் எதிர்த்தும் பல்வேறு அரசியல் கட்சிகள், சமூக அமைப்புகள், கல்வியாளர்கள், ஆளுமைகள் கருத்து தெரிவித்தும் வருகின்றனர். கடந்த 19052023 அன்று தமிழ்நாடு தழுவிய அளவில் ஆதிதிராவிடர்/பழங்குடி கல்வி பள்ளிகள், தங்கும் விடுதிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள், ஊழியர்கள் இந்த இணைப்பு முயற்சியை கைவிடக் கோரி கிளர்ச்சிகளை நடத்தியுள்ளனர்.

இந்து அறநிலையத்துறையை தவிர்த்து ஆதிதிராவிடர், பழங்குடி நலத்துறை யின் கீழ் சுமார் 2,000 பள்ளிகளும் விடுதிகளும் சுமார் 2 லட்சத்துக்கும் அதிகமான மாணவர்களும் பயனடைந்து வருகின்றனர். அரசின் கண்காணிப்பு நாளடைவில் புறக்கணிக்கப்பட்டு சீர்குலைந்து போயுள்ளது. இதனால் இவற்றில் பயன்பெறும் மாணவர்களின் எண்ணிக்கையும் கல்வித் தரமும் கீழே சென்ற வண்ணமுள்ளன. அதிலும் சிறப்பு கவனிப்பு மிகவும் தேவைப்படுகிற கிராமப்புர மாணவர்கள் பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளனர் என்பது தெரிய வருகிறது. இந்த நிலையில், இந்த கல்வி நிறுவனங்கள் பற்றிய எவ்வித ஆய்வுமின்றி 'வேண்டுகோள்கள் வந்துள்ளன' என்ற பேரில் அவசர அவசரமான அறிவிப்பு வியப்பளிக்கிறது. சமூக நீதி பற்றி இடைவிடாது பேசி வரும் அரசிடம் இதுபோன்ற காரண காரியமற்ற, அவசர அறிவிப்பை எவரும் எதிர்பார்க்கவில்லை.

எனவே இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்லெனினிஸ்ட்) தமிழ்நாடு அரசிடம் பின்வரும் கோரிக்கைகளை வலியுறுத்துகிறது.

1. ஆதிதிராவிடர்/பழங்குடி உள்ளிட்ட பிரத்தியேகமான பள்ளி/கல்லூரிகள், விடுதிகள் உள்ளிட்ட நிறுவனங்கள் அதன் நோக்கங்கள், இலக்குகளை எட்டிவிட்டனவா? நோக்கங்களை அடைய ஆட்சியாளர்கள் மேற்கொண்ட முயற்சிகள், நிதி, உள்கட்டமைப்புகள் போதுமானவை தானா? கண்காணிப்பு நடவடிக்கைகள் போதுமானவை தானா? என்ன காரணங்களுக்காக கல்வித்துறையின் கீழ் கொண்டுவர அரசு முயற்சிக்கின்றது? அதனால் ஏற்படப்போகும் விளை பயன்கள் யாவை? பொது நீரோட்டத்துடன் கலக்கும் பொது நோக்கம் கொண்டது என்று சொல்லப்படுமானால், வலுவான சிறப்பு முயற்சிகள் மூலம் 'தனித்த நீரோட்டத்தை' பொது நீரோட்டத்தில் கலக்கச் செய்யும் கோட்பாடு நிறைவடைந்து விட்டதா? பொது நீரோட்டத்தில் மலிந்திருக்கும் சாதிய பாகுபாடுகள், வன்முறைகள் களையப்பட எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள், என்ன? சமீபத்திய தேர்வுகளில் 50,000 க்கு மேற்பட்டவர்கள் தேர்வு எழுதச் செல்லவில்லை என்ற பின்னணியில் கல்வித் தரத்தை மேம்படுத்திட அரசிடம் உள்ள திட்டங்கள் என்ன? என்பன உள்ளிட்ட விசயங்களைக் கொண்ட "வெள்ளை அறிக்கையை அரசு வெளியிட வேண்டும்.

2. அரசியல் கட்சிகள், சமூக அமைப்புகள், கல்வியாளர்கள், ஆசிரியர்கள், ஊழியர்கள் சங்கங்கள் இவற்றைக்கூட்டி ஜனநாயக ரீதியிலான கலந்தாலோசனை நடத்தப்பட வேண்டும்.

3. இதில் பெறப்படும் கருத்துகள், பரிந்துரைகள் அடிப்படையில் சிறப்பு பள்ளிகளை தொடர்வதா? கல்வித்துறையுடன் இணைப்பதா? என்பதை முடிவு செய்ய வேண்டும்.

4. அதுவரை, இந்த சிறப்பு பிரிவுகளை கல்வித்துறையுடன் இணைக்கும் நடவடிக்கையை நிறுத்தி வைக்க வேண்டுமென இகக(மாலெ) வலியுறுத்துகிறது.

**சென்னை.48**
**22.05.2023**

**பழ.ஆசைத்தம்பி**
**மாநிலச் செயலாளர்,**
**இகக(மாலெ), தமிழ்நாடு**



# அம்பேத்கர் சுடர்: தோழர் திபங்கர்

*1960 டிசம்பரில், அசாம் மாநிலம் கவுகாத்தியில் பிறந்த தோழர் திபங்கர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் (மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்) பொதுச் செயலாளராக செயலாற்றி வருகிறார். இந்தியாவில் ஒரு முன்னணி கம்யூனிஸ்ட் தலைவராகத் திகழும் தோழர் திபங்கர் அவர்களின் உறுதியான அர்ப்பணிப்பு மிக்க ஒப்பற்ற பங்களிப்பிற்கு இந்த விருது ஒரு சான்றாகும். அவரது ஒப்பற்ற வாழ்க்கை முழுவதையும், கிட்டத்தட்ட ஐம்பது ஆண்டுகளை, இந்திய மக்களின் சமூக மற்றும் பொருளாதார நீதிக்காக அர்ப்பணித்து, உண்மையான கம்யூனிச உணர்வுக்கு உதாரணமாகத் திகழ்கிறார் தோழர் திபங்கர்.*

*இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் (மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்) பொதுச் செயலாளராக தோழர் திபங்கரின் தலைமையும் சமயோஜித வழிகாட்டுதலும் கட்சியின் கருத்தியல் மற்றும் திசைவழியை வடிவமைப்பதற்கும் எண்ணற்ற நபர்கள் கம்யூனிசக் கொள்கைகளை ஏற்றுக் கொண்டு ஒரு மேலான சமத்துவ சமுதாயத்தை உருவாக்குவதற்காக பணியாற்றவும் காரணியாக இருந்து கொண்டிருக்கின்றன.*

*தோழர் திபங்கர் ஒரு தலைவர் என்பதோடு கூடவே அவர் ஒரு மிகச் சிறந்த எழுத்தாளரும் சமகால அரசியலின் விமர்சகரும் ஆவார். அவரது எழுத்துகள் விரிவாக பல்வேறு அம்சங்களைக் கொண்ட இந்திய சமூகத்தை, குறிப்பாக தொழிலாளர் வர்க்கம், இந்திய விடுதலைப் போராட்டம், பகத்சிங்கின் வீர மரபு மற்றும் அம்பேத்கரின் விலைமதிப்பற்ற பங்களிப்புகள் ஆகியவற்றில் கவனம் குவித்து பகுப்பாய்வு செய்கிறது. அவருடை எழுத்துகள் மூலம், ஒடுக்கப்பட்ட மற்றும் விளிம்புநிலைச் சமூகங்கள் எதிர்கொள்ளும் போராட்டங்கள் பற்றிய, விலைமதிப்பற்ற நுண்ணறிவுமிக்க பார்வையை வளர்த்தெடுக்கக் கூடிய ஒரு ஆழமான புரிதலை நமக்குத் தருகிறார்.*

*ஒடுக்கப்பட்டவர்களின் உரிமைகளுக்காக தோழர் திபங்கர் முன்வைக்கும் ஆணிதரமான வாதங்கள் குறிப்பிடத்தக்கவை. அவர் அநீதிகளுக்கு எதிராக அச்சமின்றி குரல் எழுப்புகிறார். சமூகத்தின் விளிம்புநிலை பிரிவினரின் உரிமைகளுக்காக அயராது போராடுகிறார்; எண்ணற்ற தனிநபர்களின் வாழ்க்கையில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்துகிறார்.*

*மேலும், தோழர் திபங்கர், பாஜக தலைமையிலான ஒன்றிய அரசின் கொள்கைகளை தொடர்ந்து விமர்சித்தும், அனைவரையும் உள்ளடக்கிய ஒரு சமத்துவ சமூகத்திற்காகவும் குரல் கொடுத்து வருகிறார். சமூக நீதிக்காக ஊசலாட்டம் இல்லாத அர்ப்பணிப்பு மிக்க அவரது செயல்பாடும், ஏற்றத் தாழ்வற்ற இந்தியாவை உருவாக்குவதற்கான அயராத முயற்சியும் அவருக்கு பரவலான மரியாதையையும் பாராட்டையும் பெற்றுத் தந்துள்ளது.*

*அவரது விதிவிலக்கான தலைமை பண்பு, கம்யூனிச கருத்தியலுக்கான அளப்பரிய பங்களிப்புகள், சமூக மற்றும் பொருளாதார நீதிக்கான இடைவிடாத நாட்டம், ஒப்பற்ற சாதனைகள் ஆகியவற்றினால் உண்மையான மக்கள் தலைவரான அவரை அங்கீகரிக்கும் வகையில், விடுதலை சிறுத்தைகள் கட்சி (விசிக) தோழர். திபங்கர் அவர்களுக்கு "அம்பேத்கர் சுடர்" விருது 2023 வழங்கி கௌரவிக்கிறது.*

**முனைவர் தொல்.திருமாவளவன்**
**நிறுவனர்–தலைவர்,**
**விடுதலை சிறுத்தைகள் கட்சி**

**28.05.2023**
**ஒய்எம்சிஏ மைதானம்**
**நந்தனம், சென்னை**

MALAE THEEPORI. Registered with Registrar of NewsPaper for India TN/TAM/2002/12013
Posted on 05.06.2023 at Egmore RMS/1 Patrika Channel Regn No:TN/CCN/368/2021-2023
Published on 1st and 16th of every month R.DIS: 2804/17 Licensed to Post WPP TN/PMG/(CCR)/WPP-436/2021-2023

# புதிய தேசிய கல்விக் கொள்கைக்கு எதிராக தமிழ்நாடு சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றக் கோரியும் தமிழ்நாட்டிற்கென தனித்துவமான கல்விக் கொள்கையை உருவாக்கக் கோரியும்

## மே 27ல் அகில இந்திய மாணவர் கழகம், புரட்சிகர இளைஞர் கழகம் ஆர்ப்பாட்டங்கள்




















Owned and Published bys; S.Balasundaram from 1/10, 11th street, Karunanidhi Nagar, Ayanavaram, Chennai - 600023
Printed by R.Murugan at Print Point, 10, Pulipone Bazar 2nd Lane, Triplicane, Chennai - 600005. Editor G.Ramesh